12 பக்கங்கள் விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 22—10—1978 | இதழ்-6

# புனித ராஜ்யம்

## கலைஞர் கருணாநிதி

## காட்சி 11

[சென்னை நகரில் ஒரு வீட்டின் உட்புறம். இரண்டு இளம் பெண்கள் — கவர்ச்சியான உடை அணிந்திருப்பவர்கள் — நடுத்தர வயதான ஒருத்திக்கு அருகே நின்று கரன்சி நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்...... நடுத்தர வயதானவள், அந்தப் பெண்கள் நோட்டுகளை எண்ணி முடித்ததும் வாங்கிக் கொள்கிருள்...]

நடுத்தர வயதானவள்: உம்--மொத்தம் நானூறு இருக்குதா? இந்தா லீலா! உனக்கு நூறு! இந்தாடி காந்தா! உனக்கு நூறு!...

லீலா: ரொம்ப தேங்ஸ் அம்மா! நான் போறேன்.

நடுத்தர: போறேன்னு சொல்லாதே; போய்ட்டு வர்ரேன்னு சொல்லு'... நல்லா போயி குளிச்சி முழுகிட்டு நாள் பூரா தூங்குங்க! சரியா ராத்திரி ஏழுமணிக்கெல்லாம் வந்துடுங்க.

காந்தா: யம்மோ...... ஒரு உபகாரம் பண்ணுங்க... இன்னைக்கு எனக்கு மேல ஒரு இருபத்தி அஞ்சு ரூபா கொடுங்க எங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லை...டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து வாங்கணும் ..

நடுத்தர: ஏ, காந்தா குட்டி! இந்தப் பாலம்மாளை ஏமாத்த முடியாதுடி ...நூறு ரூபாயை அஞ்சு அஞ்சு ரூபா நோட்டா கையிலே முள்ளங்கி பத்தை மாதிரி வச்சுகிட்டு..... மேற்கொண்டு இருபத்தஞ்சு கேக்கிறியே ... இந்த நூறுக்குள்ளேயே உங்க அம்மாவுக்கு மருந்து வாங்க முடியாதா?

காந்தா: இதுக்கு வேற செலவு இருக்கு; கடை கண்ணிக்கெல்லாம் பாக்கி கொடுக்கணும். பால்காரன் வேற உயிரை வாங்குருன். கார்ப்பரேஷன் வரி கட்டறத்துக்கு நேத்தி கொடுத்த பணமே போதலே! அதனுலதான் கேக்கிறேன். நாளைக்கு எனக்கு வர்ர பங்கிலே கழிச்சுக்கிங்க'


பாலம்மாள்: என்னமோடியம்மா! இந்தா பதினைஞ்சு வச்சுக்க - முன்ன ஒரு முப்பது இப்படித்தான் அவசரத்துக்கு வாங்கினே! அதை இன்னம் கொடுக்கவே இல்லை. அதையும்சேத்து நாளைக்குக் காலம்பரக் கழிச்சுக்குவேன்; ஆமாம் சொல்லிப்புட்டேன். நீ ராத்திரிகூட வந்த ஆளுகிட்ட அவ்வளவு சரியா நடந்துக்கிலியாம்.

காந்தா: அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லையம்மா — சிகரெட்டுக் குடிக்கச் சொன்னுரு- அந்தப் புகை மூக்கில ஏறிடும்னு சொல்லிட்டேன். அவ்வளவுதான்.

பாலம்மா: சரி...சரி... புத்தியோட நடந்துக்கிட்டா பொழைக்கலாம். உம்... போய்ட்டு வாங்க... நான்சொன்னபடி நல்லா சாப்பிட்டுட்டு தூங்குங்க.. சாயந்திரம் ஏழுக்கெல்லாம் வந்துடுங்க!...

(லீலாவும், காந்தாவும் பாலம்மாவின் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுப் போகிருர்கள். அவர்கள் போனதும் பாலம்மாள் சுவரின் மாடத்திலிருந்த விபூதியை எடுத்து நெற்றியில் பட்டையாகப் பூசிக்கொண்டு, பயபக்தியுடன் உட்கார்ந்து கொண்டு விநாயகர், முருகன், சிவன் படங்களுக்கு— கும்பிடுபோட்டு விட்டு புராணப் புத்தகம் ஒன்றைக் கையிலே எடுத்து அதைப்படிக்கத் தொடங்குகிருள்)

பாலம்மாள்: (புராணம் படித்தல்) இப்படியாகத்தானே ஈரேழு உலகங்களிலுமுள்ள உயிர்களை ரட்சிக்கக் கூடிய எம்பெருமான் கைலாச கிரியில் தன் தேவி பார்வதியுடன் அமர்ந்து அண்ட பிண்ட சராசரங்கள் அத்தனையிலுமுள்ள ஜீவராசிகளை அதர்ம வழியில் செல்லாமல் தடுத்து அனைத்தையும் நியாயமான வழியில் நேர்மையான வழியில் வாழ வேண்டுமென்பதிலே அக்கறை காட்டி வந்தான். உமாதேவி எம்பெருமான் சிவனை நோக்கிக் கேட்பதாவது: சுவாமீ! கற்பு என்பது ஒரு ஆண் ஒரு பெண்ணை மனத்தால் நினைத்தாலும் அதே போல் ஒரு பெண் ஒரு ஆணை மனத்தால் நினைத்தாலும் அந்தக் கணமே கெட்டுவிடுகிறது என்று சொல்கிருர்களே; அது சரிதானு? அது பற்றித் தங்கள் வியாக்யானம் என்னவோ? இப்படிப் பார்வதிதேவி கேட்டதும் — பகவான் எம்பெருமான்-முக்கண்ணன் -தன் பாரியாள் அங்கயற்கண்ணி எனும் மீனுட்சியை நோக்கிக்கூறுகின்ருர்: பிரியே! அது மெத்தவும் சரிதான் — பிற புருஷர்களை நாடும் மாதர்களானுலும் பிற மாதர்களை நாடும் புருஷர்களானுலும் அவர்கள் கற்பிழந்த பிறவிகளாகவே கருதப்படுவார்கள் என்று விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கினுர்.



[இப்படி பாலம்மாள் புராணத்தை நீட்டி முழக்கிப் படித்துக் கொண்டிருந்தபோது, அத்தை! அத்தை! என்று ஒரு பெண் குரல் கேட்டது. பாலம்மாள், புராணப் புத்தகத்துடன் எழுந்து நின்று "யாரது?" என்று கேட்டுக் கொண்டே கதவருகே சென்ருள் சுந்தரியும் வேலனும் மூட்டை முடிச்சு, பெட்டி, படுக்கையுடன் உள்ளே வந்தார்கள்! ..]

பாலாம்மாள்: (வியப்புடன்) அடேடே! சொக்கியா வாடி குட்டி வா!

சொக்கி: அத்தே! (ஓடிப் போய் பாலம்மாளைத்தழுவிக் கொள்கிருள்)

வேலன்: அத்தையம்மா இப்ப இது பேரு சொக்கியல்ல! சுந்தரி!..

பாலம்மாள்: ஓகோ — பேரு கர்நாடகமா இருக்குன்னு சுந்தரின்னு மாத்திகிட்டியா? பேஷ்! பேஷ்! நல்லாத்தான் இருக்கு... என்னடியம்மா — உங்க தாத்தாவோட முடிவு அப்படி ஆகிப்போச்சு! நீ கார்டு போட்டிருந்தே — நான் உடனே வர முடியலே — இங்க ஒரே தொல்லே — ஓய்வே கிடைக்கல — உடம்பு வேற சரியில்லே. இன்னம் ஒருவாரம் கழிச்சி நான் வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீயே வந்துட்டே!... ஆமாம்— இது யாரு?...

சுந்தரி: இவர். வேலன்னு

(தொடர்ச்சி 12ம்-பக்கம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அர்ச்சகர் சட்டம்

அண்ணா அவர்கள் காட்டிய அந்த வழியைத் திராவிட முன்னேற்றக்கழகம் என்றைக்கும் பின்பற்றும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் அந்த இலட்சியங்களை இழக்காமல் இருக்கிறோம். ஆனால் அரசியலிலே நடைபெறுகின்ற அநீதிகளை எதிர்ப்பதற்காக, அக்கிரமங்களைத் தடுப்பதற்காக, கொடுமையை ஒழிப்பதற்காக இன்னும் ஒரு வகையிலே சொல்லப்போனால் தமிழ் இனத்தை மெல்ல மெல்லத் தாழ்வுப்படுத்துவதற்குகாரணமாக இந்தஅரசியல் அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த அரசியலை மாற்றுவதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலிலே அழுத்தமான கருத்துடையதாகச் செயல்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக்கழகம் மகத்தான வெற்றி பெறும் என்ற நிலை பிறந்தபோது விருகம்பாக்கம் மாநாட்டு மேடையில் ஒருபக்கம் மூதறிஞர் ராஜகோபாலாச்சாரியார், இன்னொரு பக்கம் கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்கள் மற்றொரு பக்கம் ம. பொ. சி. அவர்கள், இன்னும் பல கட்சித் தலைவர்கள் கூடியிருந்த அந்த மாநாட்டிலே அண்ணா அவர்கள் "ஆட்சியை நாம் கைப்பற்றி விடுவோம் என்ற நிலை உறுதியாகி இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும், ஆனால் நாம் ஆட்சிக்கு வருவதுஎன்பது இந்தநாட்டை நாம் ஆளவேண்டும் என்று ஆசைப்பட்டு அதை ஒருஇலட்சியமாகக் கொண்டு அல்ல, நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிற மகத்தான இலட்சியத்தில் சில படிகளிலேமுன்னேற வேண்டும் என்பதற்காகத் தான், நாம் இன்றைய தினம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற அளவுக்கு அரசியலிலே

பார்களா என்றுஅவர்களுக்கே தெரியாது.

அவர்களுக்கே அந்த நம்பிக்கையில்லை. அவர்களுக்குக் கொள்கை உறுதியும் இல்லை. ஆட்சிமுறை தெளிவும்இல்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள் நடத்துகிற அந்தக் கட்சி நிலைக்கும் என்ற நம்பிக்கைகூட அவர்களுக்கு இல்லை. என்னைச் சந்திக்கின்ற அந்தக் கட்சியைச் சார்ந்த ஒருவர்கூட "எங்கள் கட்சி நிலைக்கும்" என்று சொல்லவில்லை. நான் அவர்களிடத்திலே பேச நேரிடுகிறபோது எங்களுடைய கட்சி நிலைக்கும் அதன் அமைப்பு நிலைக்கும், கொள்கை நிலைக்கும் என்று கூறும் நிலை அவர்களிடம் காணப்படவில்லை. ஆனால் அன்பழகன் இல்லாவிட்டாலும், கலைஞர் இல்லாவிட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பாசறை என்றென்றும் நிலைக்கும். ஆனால் அவர்களிடத்தில் இருக்கிற தலைவர் இல்லாவிட்டால் அது நிலைக்குமா? அல்லது நிலையான ஒரு கட்சியாக அது இருக்குமா? என்று நான்கேட்கிற நேரத்தில், அந்தக் கட்சியைச் சேர்ந்த எந்த நண்பரும் தங்களுடைய கட்சி நிலைக்கும் என்று சொல்லவில்லை. ஏதோ இங்கே இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர எப்படியோ வந்து விட்டோம் என்று சொல்கிறார்களே தவிர, இந்தக்கட்சி இருக்கும், நிலைக்கும் என்ற நம்பிக்கையைஅவர்கள் தெரிவிக்கவில்லை.



ஏழாண்டுகாலம் ஆட்சிநடத்தி விட்டு, அதற்குப்பிறகு இறங்கினால் நாங்கள்கூடப்பாராட்டுவோம். ஆனால் கலைஞர் அவர்களைப் பார்த்து, ஒரு முதலமைச்சராக 7 ஆண்டுக்காலம் இருந்தவரைப்பார்த்து,ஏதோ நடுத்தெருவில் நிற்கிற ஒரு

அவர்கள் கழகத்திலே இருந்தபோது ஏதோ பெரிய குற்றம் கண்டுவிட்டவர்போல் தான் வெளியேற்றப்படுகிற அளவுக்குப் பிரச்சாரம் செய்தார். வரவு – செலவுக் கணக்கு சரியில்லை என்றுதான் வெளியே போனாரா? திராவிட முன்

தேர்ந்தெடுக்கப்பட்டபொதுக் குழு உண்டா? என்னுடைய அருமை நண்பர், இனியவர், இன்றுங்கூட நான் மறக்க முடியாத நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அவர்களுடையஅவைத்தலைவர் ஆகியிருக்கிறார் அவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொதுக்குழுவால்அவைத் தலைவராக வந்தாரா? யாரையுமே முறையாகத் தேர்ந்தெடுக்காத ஒரு கட்சி, வரவு – செலவுக்கணக்கையே காட்டாத ஒரு கட்சி, அதைநடத்துகிற எம். ஜி. ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தைக்குற்றம் சாட்டினார், குற்றச்சாட்டுகளைக் கொண்டு சென்றார்என்றால் இதைவிட வேடிக்கை வேறென்ன இருக்கிறது? இன்றைக்கு ஆளும் கட்சிக்காரர்கள் வசூலிக்காத நிதிஏதாவது உண்டா? அவர்கள் மட்டுமல்ல, பொறுப்பிலே உள்ளவர்கள் நிதி வசூலிக்காமல்யார் இருக்கிறார்கள்? பஸ் முதலாளிகளிடத்திலே நிதி வசூலிக்கவில்லையா? சினிமா கொட்டகைக்காரர்களிடத்திலே வசூலிக்கவில்லையா?இதுவரை தேர்தலில் 17 லட்சம், 20 லட்சம் 25 லட்சம் ரூபாய் என்று ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கொண்டுவந்து செலவிடவில்லையா?

திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர்கள் குற்றம் சாட்டியது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மீது குற்றம் இருக்கிறது என்பதற்காக அல்ல; திராவிடமுன்னேற்றக் கழகத்தை உடைப்பதற்கு ஒப்பந்தம் செய்துவிட்ட காரணத்தால், கழகத்தின் மீது இப்படிப் பழி சுமத்துகிறேன். அதன் மூலம் கழகத்தை என்னால் உடைக்கமுடியும் எனக்கு ஆதரவு கொடுங்கள், கருணாநிதியை இறக்குகிறேன், இறக்கினால் தமிழ்நாடு என்கைவசம் வரவேண்டும் என்ற முறையிலேதான் திட்டமிட்டு வீண் பழி சுமத்தினர்.

# எம். ஜி. ஆர். செய்யப்போவது என்ன?

ஈடுபட்டு இருக்கிறோம்'' என்று தெரிவித்தார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. இன்னும் 50 ஆண்டு காலத்திற்குத் தொடர்ந்து பணியாற்றவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது'' என்று சொன்னார். "தமிழ் இனத்தினுடைய இலக்கியத்தை, பண்பாட்டை நாகரிகத்தை, வரலாற்றை அந்த இனத்தைப் பாதுகாப்பதற்காகத்தமிழ் மக்களுடைய உள்ளத்திலே இக்கருத்துக்கள் நிலவச்செய்வதற்காக, தமிழ் மக்களுடைய உள்ளத்திலே அவற்றை இடம்பெறச்செய்து யாரும் அழிக்க முடியாத அளவுக்குப் பாதுகாத்திட தொடர்ந்து 50ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் திராவிட முன்னேற்றக் கழகம் நடைபெறக்கூடிய அரசியல் கொடுமைகளை நாளும் சந்தித்தாலுங்கூட,கழகம்பாடுபடுவது இப்போதுள்ளஅரசியலுக்காக மட்டுமல்ல. கழகம் எம். ஜி. ஆருக்காக அரசியல் நடத்தவில்லை. இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிற சிலரைக் கருதி நாங்கள் கட்சி நடத்தவில்லை. இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் இன்றைக்கு இருப்பார்கள், நாளைக்குஇருப்

இதை நான் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் கட்சியாக—நம்முடைய கண்ணுக்குத் தெரிந்தாலுங்கூட—தேர்தலிலே ஈடுபடுகிற கட்சியாக நடமாடினாலும்கூட தேர்தலிலே கிடைக்கிற வெற்றியை மக்கள் எண்ணிப்பார்க்கிற அளவுக்கு நாம் செயல்படவேண்டும் என்று விரும்பினாலும்கூட இவைகள் எல்

**பேராசிரியர் க. அன்பழகன்**

லாம்நம்முடையநடைமுறைக் கடமைகளுக்காகத்தான்.

தந்தை பெரியார்அவர்கள் 94 வயது வரை எதை எதிர்பார்த்து இந்த நாட்டில் பணியாற்றினார்கள்? கலைஞர் அவர்கள் 7 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்களை இன்று சாதாரணமாகப் பேசுகிறார்கள். ஆளுங்கட்சி நண்பர்கள்

போக்கிரியைப்போல, ஒரு கேடியைப்போல ஏதோ சமுதாயத்திற்குக் கேடு செய்த குற்றவாளியைப்போல இன்றைய தினம் ஆட்சியிலே உள்ளவர்கள் பேசுகிறார்கள். ஏதோ கலைஞர் கருணாநிதிக்கு ஒரு பெரிய சிறைச்சாலை கட்டுவதாகக் கூட சிலர் சொல்கிறார்கள். சிறைச்சாலை கட்டி முடிக்கும்போது கருணாநிதி ஆட்சிக்கு வந்தால் அந்தச்

சிறைச்சாலை அதனைக் கட்டுபவர்களுக் குக்கூட பயன்பட நேரிடலாம்.

அவர்களுக்கு மனச்சாட்சி இருக்குமானால் எங்களைவிட அவர்கள்யோக்கியர்கள்என்று வாதாடி நிலைநாட்ட முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து, இப்போது ஆளுங்கட்சியின் முதல்வராக இருக்கிற எம். ஜி. ஆர்.

னேற்றக் கழகத்தை அழிப்பதற்குத்தான் ஒரு கருவியாகப் பயன்பட முடியும் என்றநம்பிக்கையை வடக்கே உள்ளவர்களிடத்திலேஏற்படுத்திவிட்டு கழகத்தை ஒழிக்க எண்ணிய வடநாட்டில் இருந்தவர்களுக்குக் கருவியாக எம். ஜி. ஆர். செயல்பட்டு குற்றச்சாட்டுகளைக் கொடுத்தார்.அவற்றை நிரூபிக்க முடியுமா? கழகம் வரவு – செலவுக் கணக்கைக் காட்டவில்லை என்று சொன்னார் எம். ஜி. ஆர். ஆனால் 7 ஆண்டுக்காலமாக ஒரு கட்சி நடத்துகிறாரே வரவு - செலவு கணக்கு இதுவரை காட்டினாரா? ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கணக்கு ஆண்டுதோறும் அன்றைக்கு இருந்த பொதுச்செயலாளராலே பார்க்கப்பட்டு, தணிக்கைக் குழுவாலே பார்க்கப்பட்டு, ஆடிட்டருக்கு அனுப்பப்பட்டு, வருமானவரி இலாகாவுக்கு அனுப்பப்பட்டு 17 லட்சம் ரூபாய் வருமானம் அல்லது நன்கொடை வந்தது என்று சொன்னால், அதற்கு வரி விதிக்கப்படும் அளவு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எம். ஜி. ஆர். கட்சியிலே உள்ளவர்கள் செலுத்திய கட்டணம் எவ்வளவு? வருமானம் எவ்வளவு? கணக்கு எங்கே கணக்குக் காட்டுகிற அளவுக்குத் தணிக்கை குழு உண்டா?

இன்றைக்கு தந்தை பெரியார் அவர்களுடைய விழா கொண்டாடுகிற எம்.ஜி.ஆர். தந்தைபெரியாருடையகொள்கையிலே மிக முக்கியமான கொள்கை எது என்பதைஎண்ணிப்பார்த்து ஏற்றுக்கொள்வாரா? பெரியார் பேசிய நாத்திகம் பேச வேண்டாம், அதை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டாம், ஆனால் தந்தை பெரியார் அவர்கள்ஏற்றுக்கொண்ட சுயமரியாதை எம் ஜி.ஆர்.க்கு உடன்பாடுதானா? சுயமரியாதை அடிப்படையில் எந்த வகுப்பிலே பிறந்தாலும், ஆண்டவனுக்கு முன்னாலே அனைவரும் சமம் என்றுசொன்னால், ஒரு அரிசன வகுப்பினர் அர்ச்சகர் பயிற்சி பெற்றிருந்தால் அவரை அர்ச்சகராக நியமிக்க வேண்டும் என்பதை எம். ஜி ஆர். ஏற்றுக்கொள்வாரா? இது சம்பந்தமாக ஏற்கனவே கொண்டு வரப்பட்ட தமிழ்நாடுசட்டத்தைப் பாதுகாக்க, அந்தச் சட்டத்திற்கு உயிர் கொடுக்க, உச்ச நீதி மன்றத்திலே தரப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மத்திய அரசாங்கம் பாராளுமன்றத்திலே தேவையான சட்டத் திருத்தம் செய்து தமிழ்நாடு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியிலே எம். ஜி. ஆர். ஈடுபடத் தயார்தானா?

# ஆட்சித் தலைவரா?

“சட்டம் அதன் கடமையைச் செய்யும்”—

‘சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்’

‘சட்டத்தின் முன் நிறுத்துவேன்”—

“சட்டத்தைக் கண்டு எதிர்க் கட்சித் தலைவர் அஞ்சுவதேன்?”

இப்படி எம். ஜி. இராமச்சந்திரன் எப்போது பார்த்தாலும் எதற்கெடுத்தாலும் ‘சட்டம்’ ‘சட்டம்’ என்று பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் பெரிய சட்டப் பேரறிஞரோ—சட்ட வியல் ஆய்வாளரோ என்று எண்ணத் தோன்றும் அவர் அனைத்து நாட்டு அரசியல் சட்டங்களையும் கரைத்துக் குடித்தவர்போல நினைக்கத் தோன்றும் வியர், ஐவர் ஜென்னிங்ஸ் எல்லாம் இவரிடம் பயின்றமாணவர்களோ; எத்திராஜும் குமார மங்கலமும் இவருக்குப் பிறகுதானோ என நினைக்கவேண்டி இருக்கிறது.

எம். ஜி. ஆர், அகராதிப்படி சட்டம் என்றால் துப்பாக்கி வெடித்துக்கொண்டிருக்கும் என்று பொருள்; பொய் வழக்குகள் போடப்பட்டுக்கொண்டிருக்கும் என்று பொருள் அடக்கு முறைகள் அவிழ்த்து விடப்படும் என்று அர்த்தம் எம். ஜி. ஆரின் அகராதிப்படி சட்டத்திற்கு அர்த்தமே அனர்த்தமானது அவர் சட்டத்திற்குத் தரும் விளக்கம் விசித்திரமானது—ஏன், விபரீதமானதும் கூட.

அராஜகத்தில் ஈடுபட்டால் சட்டம் அவர்களுக்குத் துணை போகும். இராமச்சந்திரன் கட்சிக்காரர்கள் சாராயம் காய்ச்சினால் சட்டம் அவர்களுக்கு கட்டியம்கூறும்; அவர்கள் குடித்து விட்டு கலாட்டா செய்தால் சட்டம் அவர்களுக்குச் சலாம் போடும்; ஃபோர்ஜரி செய்தால், அனுமதி இன்றி ஜல்லி உடைத்து விற்றால், காவல் துறையினரைத் தாக்கினால், கட்டி வைத்து அடித்தால், காவல் நிலையத்திற்குள் நுழைந்து கைதிகளை விடுவித்துச் சென்றால். இப்படி எந்தக் குற்றத்தைச் செய்தாலும் இராமச்சந்திரனின் சட்டம் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும்!

ஆனால் அதே நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஜனநாயக ரீதியில் நியாயங் கேட்டுக் கருப்புக் கொடி பிடித்தால் அவருடைய சட்டம் சீறிப் பாயும் தொழிலாளர்கள் உரிமைக்காக வாதாடினால் அவருடைய சட்டம் அவர்களின் உயிரைக் குடிக்கும்.

இராமச்சந்திரன் ஆட்சியில் சட்டம் எப்போது உறங்கிக் கொண்டிருக்கும் எப்போது விழித்துக் கொண்டிருக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. உறங்கிக்கொண்டிருப்பதைப் போல் கையிலே எடுத்துக் கொள்கிறார்கள். அதனை மண்டையிலே தட்டி மயங்கி விழச் செய்து விடுகிறார்கள். அவர்களே காவலர்கள்—அவர்களே நீதிபதிகள்—அப்படிச் சொல்வது கூடச் சரியில்லை. அவர்கள் காவல் துறையினரின் எஜமானர்கள்—நீதித் துறையினுடைய மேலாளர்கள்.

அண்மையிலே ஒரு அக்கிரமம் நிகழ்த்தப்பட்டது—அநியாயம் விளைவிக்கப்பட்டது; ஆளும் கட்சி ரவுடிகளால் இளஞ் செழியன் எனும் இளம் தளிர் கிள்ளி எறியப்பட்டு விட்டது. அந்தப் பிஞ்சுக் கீரைத்தண்டுஇந்த அரக்கர்களால் வேருடன் பிடுங்கி எறியப்பட்டுவிட்டது. அந்தப் பால்மணம் ஆறாத பாலகன் அந்தப் பாவிகளால் பதைபதைக்கச் சொல்லப்பட்டான். இந்தக் கொடூரக் குற்றம் புரிந்தவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள். எனவே சட்டம் எப்போதும் போலத் தூங்கப் போய் விட்டது.

இராமச்சந்திரன் ஆட்சியின் மாவட்டத் தலைவர் ஐ. ஏ எஸ். அதிகாரி அறிக்கை விடுகிறார்: இளஞ்செழியன் அந்தக் கொடியவர்களின் கல் வீச்சில் மாண்டிருப்பதற்கில்லையாம். விபத்தால் இறந்திருக்கக் கூடுமாம் விபத்து வேண்டுமானால் கல்வீச்சால் ஏற்பட்

**எல்.கணேசன், பி.ஏ., பி.எல்.,**
**வெளியீட்டுச் செயலாளர்**

## எழுந்துவா இளஞ்செழியா!

**கவியரசர் பொன்னிவளவன்**

நெஞ்சம் கொதிக்கிறது! நீரில்கண் மிதக்கிறது!
வஞ்சகரை எண்ணிமனம் வலிக்கிறது! பதைக்கிறது!
பிஞ்சுகளில் வெள்ளரியின் பிஞ்சுபெறும்
பெருமையைப்போல்
பிஞ்சுப் பருவத்தில் பெருமைபெற்ற இளஞ்செழியா!

இளஞ்செழியா! உன்னிதழ்கள் எங்களெதிர்
கொஞ்சுதமிழ்
வளம்பொழியும் நேரமெல்லாம் வாய்திறந்து
கேட்டிருந்தோம்!
‘நலம்பொலியும் உன்தொண்டால் நாட்டில்!’ என
நினைத்திருந்தோம்!
களபலியாய் ஆய்விட்டாய்! கலங்கவைத்துப்
போய்விட்டாய்!

நாட்டமுடன் கேட்பவர்முன் நாநயநா யனம்நீதான்!
வாட்டம் தொலைக்குமணி வாசகங்கள் உதிர்த்தவன்நீ!
தோட்டத்தில் இருப்பவரின் துணையர்க இருப்பவர்கள்
கூட்டத்தில் பேசும்உனைக் கொலைசெய்து போட்டனரே!

சொல்லடியால் மாற்றாரைச் சுருளவைத்த தம்பிஉனை
வல்லடியால் வம்படியால் வாயடியால் வாழ்பவர்கள்
கல்லடியால் சாகடித்த கயமையினை எண்ணுகின்றேன்!
உள்ளபடி அறவழியை உதறிவிடத் துடிக்கின்றேன்!

என்னடா தமிழனுக்கு இனிப்பொறுமை? எங்களிரு
கண்ணடா நீ! இனிமேல்காட்சியென்ன? மாட்சியென்ன
பண்ணடா உன்பேச்சு! பைந்தமிழா! இதுஎன்ன
மண்ணடா தமிழனெல்லாம்மானமின்றிக்கிடக்கின்றான்!

கொழுந்துகளில் நல்லமருக் கொழுந்தைப்போல்
மணப்பவனே!
எழுந்துவா இளஞ்செழியா! எனஉன்னை நானழைத்து
விழுந்திருக்கும் கண்ணீரில் வேதனையைக் கழுவுகின்றேன்!
இளந்தளிரே; உன்னையெண்ணி என்பயணம்
தொடருகின்றேன்!

# ஆளுங் கட்சி அமைப்பாளரா?

குற்றம் செய்பவர்கள் அ. தி. மு. க. காரர்கள் என்றால் சட்டம் உறங்கப் போய் விடும். ஆளும் கட்சிக்காரர்கள் விழித்துக்கொண்டிருக்கும்; அது ஆண்டவனைப் போல் ‘அரிதுயிலில்’ ஆழ்ந்திருக்கும். விழித்துக் கொண்டிருப்பதைப் போல் உறங்கிக்கொண்டிருக்கும்?

அண்மையில் ஒரு அவசரச் சட்டம் போட்டார் இராமச்சந்திரன். ஏன் போட்டார் மதுவிலக்குக் குற்றத்தை அறவே போக்குவதற்குப் போட்டாராம், “சட்டம் போடுபவர்கள் சட்டத்தை உடைப்பவர்களாக இருக்கக் கூடாது” என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இராமச் சந்திரனே சட்டத்தை நொறுக்குவதற்கே சட்டம் கொண்டு வருகிறார். சாராய சாம்ராஜ்ய சக்கரவர்த்திகளே அவர் கட்சிக்காரர்கள்தான் மாமூல் வசூலிப்பவர்களே அவர் கட்சிக்காரர்கள்தான் எனினும் இராமச்சந்திரனே அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்.

சட்டத்தை நிறைவேற்ற இவருடைய ஆட்சியில் காவல் துறை. நீதித் துறை இவை எல்லாம் தேவையில்லை. இதற்காக வென்றே இவருடைய அமைப்பாளர்கள் இருக்கிறார்கள், இவருடைய கட்சிக்காரர்களே சட்டத்தைத் தங்கள் டிருக்கக் கூடுமாம். வேதனை மிக்க சம்பவத்திற்கு விளக்கம் தருகிறார், வியாக்கியானம் செய்கிறார் இவரோ மாவட்ட ஆட்சிக்கே தலைவர். தன் தகுதியை மறந்து, தன் பதவியின் அந்தஸ்தைத் துறந்து அறிக்கை கொடுக்கிறார். ஆளும் கட்சி அமைப்பாளரைப் போல. கல்வீச்சால் உயிர் போகவில்லை. வீசிய கல் மண்டையைப் பிளந்ததால் தான் உயிர் போயிற்று. வீசிய கல் வேறு திசையில் போயிருந்தால், மண்டையைத் தாக்காமல் இருந்தால், மண்டையைத் தாக்கினாலும் மண்டையைப் பிளக்காமல்இருந்தால்-உயிர்போகாமல்இருந்திருக்கக் கூடுமல்லவா? எனவே கல் வீசியதால் உயிர்போகவில்லை. வீசிய கல் மண்டையைப் பிளந்ததால்தான் உயிர் போயிற்று. இப்படி ஒரு விளக்கம் தருவதைப்போல்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை விடுகிறார். இளஞ்செழியன் உயிர் கல் வீச்சால் போகவில்லையாம். கல் வீச்சு கார் விபத்தை ஏற்படுத்தியதாம். கார் விபத்து இளஞ்செழியன் உயிருக்குஉலைவைத்ததாம். ஆகா! என்னபொருத்தமான விளக்கம். இந்த விளக்கத்தைக் கொடுக்கவா இவர் ஓர் ஐ. ஏ. எஸ் அதிகாரியாக இருக்கவேண்டும்? இதற்கு ஓர் அ. தி மு. க. அமைப்பாளரே போதுமே.

மாவட்ட ஆட்சிக்கே தலைவர். மற்ற மாவட்ட அதிகாரிகள் அனைவரும்—மாவட்ட காவல்துறை அதிகாரி உட்பட இவருக்குக் கீழே பணிபுரிபவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரே இப்படி ஒரு அறிக்கை கொடுத்தால் ஒரு சப்-இன்ஸ்பெக்டரோ அல்லது இன்ஸ்பெக்டரோ எப்படி துப்புத் துலக்குவார்கள்? எப்படிவழக்குத் தொடர்வார்கள்? தொடரப்பட்ட வழக்கை எப்படி நடத்துவார்கள்? எப்படிப்பட்ட தீர்ப்புக் கிடைக்கும்? இளஞ்செழியன் உயிர் இழப்பிற்கு அ. தி. மு. க. ரவுடிகளின் கல் வீச்சுக் காரணமில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தால் என்ன பொருள்? குற்றவாளிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் குடை பிடிப்பானேன்? குற்றவாளிகளைத் தப்பிக்க இவரே வழிவகை செய்வானேன்? இதுதான் சட்டம் தன் கடமையைச் செய்யும் விநோதமா?

காவல்துறை புலனாய்வு செய்துகொண்டிருக்கும்போது காவல் துறைக்குக் காட்டப்படும் இரகசிய சமிக்ஞை தானே இந்த அறிக்கை. இப்படி-கேவலம் ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி நடந்து கொள்ளலாமா?

அமைச்சரவை வரும் போகும். ஆனால் நிர்வாகஇயந்திரம் நிரந்தரமானது. ஆங்கில ஆட்சியாளர்களின் கரத்திலிருந்த நிர்வாக இயந்திரம் அவர்கள் போட்டிருந்த சட்டத்தின்படி அந்தக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது தடியடிப் பிரயோகம் செய்தது, துப்பாக்கிச்சூடு நடத்தியது, சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தது. காந்தி, நேரு, படேல், பந்த் ஆகிய அனைத்துத்தலைவர்களும் அன்றைய நிர்வாக இயந்திரத்தின் கெடுபிடிகளுக்கு, நடவடிக்கைகளுக்கு ஆளானார்கள். ஆனால் சுதந்திரம் பெற்றபிறகு அதே நிர்வாக இயந்திரம் கெடுபிடிகளுக்கு ஆளானவர்களின் கரத்திற்கு மாற்றப்பட்டது. சுதந்திரப் போராட்டக் கட்சியாகிய காங்கிரஸ் ஆளும்

(10-ம பக்கம் பார்க்க)




பிரதிநிதி
கே. எம். ஜி. மாதவன்
11, புதுத்தெரு. மைலாப்பூர்
சென்னை—4.

# காவிரிக் கரையில் கூடுவோம்!

# கலைஞர் ஆணையை ஏற்போம்!

இந்திய வெளி விவகார அமைச்சர் அடல் பிகாரி வாஜ்பாயி அண்மையில் ஐக்கிய நாட்டு மன்றத்தில் முழக்கமிட்டிருக்கிறார், உலகப் பிரச்சினைகளில் இந்திய நாட்டின் கொள்கையினை எடுத்துக் காட்டி எடுப்போடு பேசியிருக்கிறார். பிரச்சினைகளை ஆய்ந்து கருத்தாழத்தோடும் நாட்டின் கருத்தின் அடிப்படையிலேயும் அலசியிருக்கிறார். இது அகமகிழ்ச்சியை அளிக்கிறது.

அயல் நாட்டுக் கொள்கையில் அறிஞர் அண்ணாவைப் பின்பற்றி கழகம் என்றும் மத்திய ஆட்சியின் நிலையிலே நின்று செயல்பட்டுக் கொண்டு வருகிறது, வாஜ்பாயி ஐ. நா. மன்றத்தில் எடுத்து வைத்துப்பேசிய பிரச்சினைகளில் நம்மைப்பொறுத்தவரை கருத்து வேறுபாட்டுக்கு இடமேயில்லை.

உலகில் 'நாடு' என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று ஐ. நா. மன்றத்தில் அழகாகவும் ஆணித்தரமாகவும் எடுத்து விளக்கியிருக்கிறார்.

ஆயிரம் அரசியல் ஞானிகள் ஒன்று கூடி ஆய்ந்தாய்ந்து 'நாடு பற்றிய இலக்கணம் வகுத்தாற் போன்ற வள்ளுவன் கூறிய வாய் மொழியை மேற்கோள் காட்டியுள்ளார் வாஜ்பாயி.

வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டை" எண்ணித்தமிழ் உலகமே பூரிப்படைந்தது; பெருமை கொண்டது.

உலகில் அமைதி தவழ வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டி வருகின்றது இந்தியா; பெரும் வல்லரசுகள் அணு ஆயுதங்களை வைத்திராத நாடுகளுக்கு அணுசக்திகுறைப் போம் என்ற உறுதிமொழியினை அளிக்க வேண்டும் என்று வாஜ்பாயி வற்புறுத்திப் பேசியதை எவரும் வரவேற்காமல் இருக்க முடியாது,

ஆயுதக் குறைப்புப்பற்றிய ஆறு அம்சத் திட்டங்களை எடுத்துக் கூறி உலகின் அமைதிக்கு ஆக்க பூர்வமான வகையில் செயலாற்றியதைக்கண்டு பெருமைப் படாமலும்இருக்க முடியாது. தெற்கு ஆசியாவில் உறுதியான நிலையையும். சமாதானத்தையும் உருவாக்க இதுவரை இந்தியா எடுத்து வந்துள்ள உருப்படியான நடவடிக்கைகளை உருக்கத்தோடு எடுத்தியம்பியிருக்கிறார். இந்த நடவடிக்கைகளால் அண்டை நாடுகளின் ஒத்துழைப்புச் சூழ்நிலை உருவாகி வருவது இந்திய நாட்டிற்கு இன்னும் பெருமை சேர்க்கத்தான் செய்கிறது.

எல்லா நாடுகளுடனும் இரு தரப்பு உறவுகளை வளர்த்துக் கொள்வது இந்தியாவின் கொள்கை என்று மேலும் உறுதிப்படுத்திக் கூறியிருக்கிறார்.

தென்னாப்பிரிக்க ஆட்சிகடைப் பிடித்து வரும் நிற வெறிப் போக்கை 1946 ஆம் ஆண்டிலேயே இந்தியா கண்டித்து வந்ததைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நமீபியாவின் விடுதலைக்கு ஐ. நா. மன்றத் திட்டத்தை தென்னாப்பிரிக்கா பிரசுரித்தல் கூடாது. அப்படிச் செய்யுமானால் அதற்கு எதிராக ஐ. நா. சாசனப்படிதடைகளை நடைமுறைப்படுத்துவது நியாயமாக இருக்கும் என்று எடுத்துக் கூறியிருப்பது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும்.

தற்போதைய பொருளாமுறை, செல்வம் மிகுந்த நாடுகளுக்கும் வறுமையில் உழலும் நாடுகளுக்கும் இடையே வேற்றுமையை விரிவுபடுத்துகிற நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மேற் கூறிய சீரிய கருத்துக்கள் சிந்தனைக் குரியவையே. உலக நாடுகள் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து ஏற்ற முடிவினை எடுக்க வேண்டிய நிலையும் நேரமும்வந்துள்ளதை எடுத்துக் காட்டியிருப்பது போற்றக் கூடியதாகும்.

**சா. கணேசன்**

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பேச்சினை மன்றத்தில் இருந்தவர்களில் ஒருவராவது ஒரு வார்த்தையாவது புரிந்து கொண்டார்களா? என்றால் இல்லை. ஏனென்றால் அங்கே அமர்ந்து இருந்த கோடிக் கணக்கான மக்களின் பிரதிநிதிகளுக்குப் புரியக்கூடிய மொழியில் பேசவில்லை. இந்திய மக்கள் அனைவரும் அம்மன்றத்தில் வாஜ்பாயின் பேச்சினைக் கேட்டிருப்பார்களேயானால் புரிந்து கொண்டிருப்பார்களா என்றால் சந்தேகமேயாகும்.

இந்தியாவிலே வாழ்கின்ற நாற்பது கோடி மக்களுக்கு மேல் தெரியாத மொழியான இந்தியில் அவர் பேசியிருப்பது அர்த்தமற்ற செயலாகும்.

எப்படி இருந்தபோதிலும் வாஜ்பாயின் அதிகாரிகள் அவருடைய பேச்சினை மக்களின் வரிப்பணத்திலிருந்துஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அதை எல்லாப் பிரதிநிதிகளுக்கும் விநியோகித்திருப்பார்கள்.

நேராகப்பேச்சினைக் கேட்டால் விளைகின்ற உணர்வும், பயனும் அப்பேச்சினைப் படித்தால் வருமா என்றால் முழு அளவில் இருக்க முடியாது என்பதை முட்டாளும் ஒத்துக்கொள்ளத்தான் செய்வான். அப்படிப்பட்டப் பேச்சினை எழுத்து வடிவத்தை பெரும்பாலோர் எப்போதும் படிப்பதில்லை என்பதைஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். மறைத்துப் பயனில்லை.

ஐ. நா. மன்றத்தில் இந்தி மொழியையும் ஆட்சிமொழியாக ஏற்கவேண்டும் என்பதில் ஒரே பிரதிநிதி மட்டும் முயன்று பயன் என்ன?

இந்தியாவிலேயே இந்தி மொழி இன்னும்ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் ஐ. நா. மன்றத்தில் அதனை ஆட்சி மொழி ஆக்க முயலுவதில் அர்த்தமில்லை. பைத்தியக்காரத் தனம் தான் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

இந்தி மொழிக்காரர்களின் பேராசைக்கும் ஆதிக்க மனப்பான்மைக்கும் ஊக்கம் ஊட்டுகின்ற போக்காக வாஜ்பாயின் நடவடிக்கை அமைந்திருக்கிறது. இந்த நிலை தொடருமானால் வேதனைக்குரிய ஒன்றாக முடியும். இதனால் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலே உள்ள ஐ. நா. மன்றத்தில் ஆற்ற நினைக்கும் காரியம் அடியோடு பாழ்பட்டுப் போகாதா?

ஆட்சியிலே உள்ள தலைவர்கள் அனுதினமும், இந்தியைத் திணிக்கவில்லை என்று அள்ளி வீசுகின்ற வாக்குறுதி வெறும் ஏமாற்று வித்தையே என்பதை இந்தப்போக்கு வெளிப்படையாக எடுத்துக் காட்டவில்லையா?

இந்த ஆதிக்கப் போக்காலும் அடாவடி நடவடிக்கையாலும், மற்ற மொழிக்காரர்களுக்கு தங்களுடைய மொழி ஒடுக்கப்படுகிறது; அழுத்தப்படுகிறது என்ற உணர்வு ஏற்படாதா? அது ஒற்றுமைக்கு ஊறு விளைவித்து விடாதா?

இந்தி மொழி ஒன்றேதான் இந்தியாவின் தேசிய மொழி என்று உலகுக்கு அறிவுக்கும் போக்காக அடல் பிகாரி வாஜ்பாயின் ஐ, நா. மன்ற நடவடிக்கை அமைந்திருக்கிறது.

இந்தி பேசுகின்ற மக்கள் வாழும் நான்கு மாநிலங்கள் மட்டும் இணைந்த நிலமே இந்தியா அல்ல. இருபத்து இரண்டு மாநிலங்கள் கொண்டதே இந்தியா. இதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த நிலை நீடித்தால் விளைவு விபரீதமாகும். வீண் பிடிவாதமும் ஆதிக்க மனோபாவமும் அழிவைத் தேடித் தரும்.

மொழி ஆதிக்கத்தை முற்றும் தகர்ப்போம். இவ்வாண்டின் இறுதியில் காவிரிக் கரையில் கூடுவோம்; கலைஞர் ஆணையை முடிப்போம்; கழக வெற்றியைக் குவிப்போம்!

---

# பாகிஸ்தானைத் தூண்டிவிடும் அமெரிக்கா!

"சுதந்திரம், நீதி ஆகியவற்றின் அடிப்படையில் உலக நாடுகள் தங்களின் நேர்மையை, உறுதிப்பாட்டை செயல்படுத்திக் காட்ட சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்திக் கொள்வதோடு, அப்படி உண்டாக்கிய அணு ஆயுதங்களை அழித்துப்பலங்குன்றிய நாடுகளிடையே உள்ள போர் அச்சத்தைப் போக்க வேண்டும் உலக அமைதிக்கு வழிவகுக்க அனைத்து நாடுகளும் முன்வர வேண்டும்." என்று நமது வெளி விவகார அமைச்சர் வாஜ்பாய் மனிதர்களின் சமாதான சகவாழ்வுக்கு குரல் கொடுத்துள்ளார். இதைப் போலவே கூட்டுச் சேரா நாடுகளின் பிரதி நிதிகளும் சமாதான உலகைக் காண ஒத்துழைப்போம் வாரீர்! வாரீர்! என்று முழங்கியுள்ளனர்.

வெளிப்படையாகச் சொன்னால் பணபலம், படைபலம் குறைந்த நாடுகள் (Third World) கூட்டுச் சேராக் கொள்கையை ஆதரித்துக் கொண்டிருக்கின்றன. இப்படி அணி வகுத்துள்ள இந்த கூட்டுச் சேரா நாடுகள் பலம் வாய்ந்த வல்லரசுகளோடு ராணுவ உடன்பாடு வைத்துக் கொள்வதுதான் தவிர்க்கப் படுகிறதே ஒழிய இராணுவ தளவாடங்களை அந்த வல்லரசுகளிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்டு எதிரிகளை எச்சரிப்பது இன்னும் ஒழியவில்லை. எதிரிகளின் படைபலத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள படைக் கருவிகளை வாங்கிக் குவிக்கின்றனர், ஆகவே புதிய படைக் கருவிகளை தயார்செய்வதும், படைக் கருவிகளை வாங்கிக் குவிக்கும் ஓட்டப் பந்தயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்டு பழுதாக உள்ள "கான்பெர்ரா" 'ஹண்டர்ஸ்' கிபார் விமானங்களுக்குப் பதிலாக 'ஜாக்குவார்' விமானங்களை வாங்குவதற்கு பிரிட்டிஷ் அரசுடன் ரூ. 1300 கோடி அளவில் ஒப்பந்தம் செய்து

**டி. ஆர். பாலு**

கொள்ள இந்திய அரசு தயாராகி விட்டது.

இதை அறிந்த அமெரிக்க வல்லரசு வழக்கம் போல வலியச் சென்று பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிபுரிய முன் வந்துள்ளது. இதற்கு முன் மிர்ரேஜ் III, மிர்ரேஜ் 55 போன்ற மிகவும் சக்திவாய்ந்த போர் விமானங்களைப் பெற்றிருக்கும் பாகிஸ்தானுக்கு மிக வலிமை வாய்ந்த F.5 E இண்டர் செப்டர் போர் விமானங்களை அமெரிக்கா அளிக்க முன்வந்துள்ளது பற்றி எந்த இந்தியனும் சிந்திக்காமல் இருக்க முடியாது. உலகத்தின் மிகப்பெரிய குடியரசு நாடுகளில் ஒன்றான ஐக்கிய அமெரிக்க குடியரசின் இந்தப் போக்கு தன்னைப் போன்ற ஒரு குடியரசு நாடான இந்தியாவிற்கு இழைக்கப்படும் அநீதி என்பதை அமெரிக்கர்களும் அறிவார்கள். ஆனால் அவர்கள் எப்போதும் போலவே இப்போதும் "Balaneng Powers" (பேலன்சிங்பவர்) என்ற நொண்டிச் சாக்கினை சொல்கின்றனர். ஐக்கிய அமெரிக்க குடியரசின்வெளிவிவகாரசெயலாளராக திரு. டல்லஸ்இருந்தபோதும் சரி, திரு. கிசிங்கர் இருந்தபோதும் சரி, இப்போதுள்ள திரு. சைரஸ் வான்சாக இருந்தாலும் சரி இதே காரணத்தைத்தான்கூறுகின்றனர், அண்டை நாடுகளின் ஆயுத பலம் சமமாக இருக்கவேண்டுமாம்.

இந்தியா — ஆயுதம் வாங்குவது, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள!

பாகிஸ்தான் — ஆயுதம் வாங்குவது, அண்டை நாட்டை வம்புக்கிழுக்க!

இது அமெரிக்காவுக்குத் தெரியாதா? அல்லது தெரியாததுபோல் நடிக்கிறதா?

★

# இந்தியப் பொருளாதாரம் ஏற்றம் பெறுமா?

**மறைமலையான்**

இந்தியப் பொருளாதாரம் இன்று ஏற்றம் பெற்று வருகிறதா?

சிந்திக்க வேண்டிய சிக்கலான கேள்வி இது.

ஆனல், இன்று எத்தனை பேர் அரசியலில் காட்டும் அக்கறையை — திரையுலகிலே செலுத்தும் ஆர்வத்தைப் — பொருளாதாரத்தை நோக்கித் திருப்பி விடுகிறார்கள்?

என்னதான் படிப்பிலே முதிர்ந்திருந்தாலும் எவ்வளவுதான் பதவியிலே உயர்ந்திருந்தாலும் அவரவருடைய சொந்தப் பொருளாதார வளர்ச்சி பற்றிதான் சுறுசுறுப்புக்காட்டப்படுகிறதே அல்லாமல் — நைந்து நலிந்து கொண்டிருக்கும் நாட்டுப் பொருளாதாரம் பற்றி — நாட்டுப் புறத்தார் பொருளாதாரம் பற்றிச் — சிந்தனை எங்கே செலுத்தப்படுகிறது?

நம நாட்டு ஏடுகளும் (ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலான இந்திய மொழி ஏடுகளும்) — அரசியல் தலைவர்களுக்குத்தான் அளவுக்கு மீறி விளம்பரம் தருகின்றனவே தவிர — நடிகர், நடிகைகளுக்குத்தான் பெரும்பகுதி இடத்தை ஒதுக்குகின்றனவே தவிர — அறிவியல், பொருளாதாரச் சிந்தனைகளுக்குச் சரியான மதிப்பளித்துத் தகவல்களை வெளியிடுகின்றனவா?

இல்லை.

இதனல் ஓரளவுபடிப்பறிவு உள்ளவர்களுமே கூட நடிப்பவர்களைப் பற்றியும் அரசியல் தலைவர்களைப் பற்றியும் மட்டுமே அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

இடுப்பொடிந்து கிடக்கும் இந்தியப் பொருளாதாரம் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை.

இதன் விளைவு என்ன?

பொழுதுபோக்குக் கதை ஏடுகளாலும், திரைப்படங்களாலும் சமுதாயமே பழுதுபட்டுப் பாழாகிக்கொண்டிருக்கிறது.

எனவேதான், தன்னைவாட்டும் வறுமை பற்றிய தன்னுணர்வையே இழக்கும் அளவுக்கு இந்த நாட்டு ஏழைமனிதன், பொருளாதார அறிவைப் புறக்கணிக்கின்ற 'மூளைச் சலவைக்கு' இலக்காகி இருக்கிறான்.

## உலக அளவில்..

பொருளாதாரத்துறையில் இன்று இந்தியாவின் நிலை என்ன?

மிகவும் வெட்கப்படத்தக்க — வேதனைப்படத்தக்க அளவில்தான் நாடு நலிந்துகொண்டிருக்கிறது.

காவிரிக் கரையோரமுள்ள பசுமையான கழனியைப் போல இந்தியப் பொருளாதாரம் ஏற்றம் பெற்று இருக்கவில்லை; தகிக்கும் வெயிலில் தணலாகக் கொதிக்கின்ற 'தார் பாலைவனம்' போலத்தான் அது சீரழிந்து கிடக்கிறது.

உலக மட்டத்தில் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகவே இந்தியா எண்ணப்படுகிறது.

வருவாய் அடிப்படையில் நானிலத்தில் உள்ள நாடுகளை மூன்று பிரிவுகளாக 'உலக வங்கி' என்னும் நிறுவனம் பகுத்துக் காட்டியுள்ளது.

அதனுடைய கணிப்புப்படி ஓர் ஆளுக்கு ஆண்டுக்கு இரண்டாயிரம் ரூபாயும் அதற்குக் கீழேயும் மட்டுமேவருவாய் வருகின்ற மிக வறிய நாடுகள்: 34.

இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் ஏறத்தாழ முப்பத்தைந்தாயிரம் வரை வருவாய் வரக்கூடிய நடுநிலை வருவாய் நாடுகள்: 58.

இதற்கும் மேலே மிகுதியாகச் செல்வம் கொழிக்கும் நாடுகள்: 19.

இவையல்லாமல் வறுமைக் கோட்டைத் தாண்டி வளமான பொருளாதார அமைப்போடு பீடுநடைபோடும் பொதுவுடைமை நாடுகள் தனியாக இருக்கின்றன.

இவற்றில் எந்தப் பிரிவில் இந்தியா வருகிறது தெரியுமா?

முதலில் குறிப்பிட்டுள்ளோமே மிக வறிய நாடுகள் முப்பத்து நான்கு என்று — அந்தப் பட்டியலில்தான் இந்தியா இடம் பிடித்துக்கொண்டுள்ளது.

அரசியல்விடுதலையடைந்து முப்பது ஆண்டுகள் ஆகியும் இந்தியாவைப் போன்ற ஒரு மக்களாட்சி நாடு — ஜனநாயக நாடு — பொருளாதாரத் துறையில் மிக ஆழமான பகுதியிலேயே விழுந்து கிடக்கிறது. என்றால் — பிறகு இந்த நாடு அரசியல் விடுதலை பெற்றதற்குத்தான் என்ன பொருள் இருக்கிறது? அதிலும் ஜனநாயக நாடு என்று மார்தட்டிக் கொள்வதில்தான் என்ன சிறப்பு இருக்கிறது?

## எரிக்கும் ஏழைமை நெருப்பு

உலக அளவில் பொருளாதாரத் துறையில் இந்தியா இழிந்த நிலையில் கிடப்பதைப் பற்றி எண்ணுகின்ற நாம் உள்நாட்டைக் கவிந்துள்ள இருண்டநிலையையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று அறுபது கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்திய நாட்டில் ஏறத்தாழ இருபத்து நாலரைக் கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்கும் கீழேயே தங்களது வாழ்க்கைப் படகைக் கண்ணீர் வடித்தபடியே தள்ள முடியாமல் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது நூற்றுக்கு நாற்பத்தைந்துபேர் அவ்வாறு நடைப்பிணங்களாக நைந்து நலிகிறார்கள்.

வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ளவர்கள் என்பவர்கள் யார்?

ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் கூட வருவாய் இல்லாதவர்கள்தான் வறுமைக் கோட்டுக்கும் கீழே வாழ்கின்றவர்களாக இன்றைய விலைவாசி நிலவரப்படி கருதப்படுகிறார்கள்.

1976—77 நிதியாண்டுக் கணக்குப்படி இந்தியாவின் நிகர வருவாய் என்ன தெரியுமா?

64,279 கோடி ரூபாய்கள்.

இவற்றில் தனியாள் வருவாய் (PER CAPITA INCOME) ஆக எதிர்பார்க்கப்பெற்ற தொகை: ரூ. 1049 ஆனல் கிடைத்திருப்பதோ; ரூ. 811.

இந்த வருவாய்க் கணிப்பு நகர்ப்புற மக்கள் நாட்டுப்புற மக்கள் இருசாரரையும் ஒட்டு மொத்தமாகக் கொண்டு எடுக்கப்பெற்றதாகும். இவர்களில் நகர்ப்புற மக்கள் 28 விழுக்காடுதான்.

நாட்டுப்புறங்களில் வாழும் 72 விழுக்காடு உழவர்குடி மக்களின் தனியாள் வருவாய் என்ன தெரியுமா?

ஆண்டுக்கு ரூபாய் 196-50 மட்டுமே!

இதிலே இன்னொரு வயிற்றெரிச்சல் கொள்ளக் கூடிய — இதயத்தைப் பிளக்கக் கூடிய — அவல நிலையும் நம்மை அச்சுறுத்துகிறது.

1950—51 நிதியாண்டு நிலவரப்படி, நாட்டுப்புற (RURAL) மக்களின் தனியாள் வருவாய்: ரூ. 197-80

ஆனல். 1976 77 நிதியாண்டு நிலவரப்படி நாட்டுப்புற மக்களின் தனியாள் வருவாய் ரூ. 196 50.

இந்தியா வெள்ளையர் சுரண்டலிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் கால் நூற்றாண்டுக் காலத்துக்குப்பிறகும் இங்குள்ள ஓர் உழவர் குடிமகன் ஆண்டுக்கு ரூ. 196 50 தான் பெற முடிகிறது என்றால் — மாதத்திற்குப் பதினேழு ரூபாய் கூட வருவாய் இல்லையென்றால் — அவன் கால் வயிற்றுக் கஞ்சியைக் கூட முடையாறக் குடிக்க முடியுமா? மானத்தைக் காக்கத் தேவையான ஆடையைத்தான் அவனல் வாங்க முடியுமா? ஒழுகும் ஓலைக் குடிசையைப் பழுது பார்க்கத்தான் அவனிடம் பணம் இருக்குமா?

இது எவ்வளவு கேவலமான அதே சமயம் எத்துணை கொடுமையான வறிய வாழ்க்கை நிலை?

இந்த ஏழைமை நெருப்பிலிருந்து இந்திய மக்கள் என்றைக்கு விடுதலை பெறப் போகிறார்கள்? எப்படி விடுதலை பெறப் போகிறார்கள்?

சிந்திக்கச் சிந்திக்க சித்தமே குழம்பிக் கலங்கவில்லையா?

## எந்த வளம் இல்லை!

இவ்வளவுக்கும்
இந்தியாவில் —
— கனிவளம் இல்லையா?
— கழனி வளம் இல்லையா?
— கங்கை, காவிரி போன்ற
ஆற்று வளம் இல்லையா?
— கடல் வளந்தான்
இல்லையா?
— மலை வளம் இல்லையா?
— மழை வளந்தான்
இல்லையா?

இயற்கைச் செல்வங்கள் எண்ணற்ற வகையில் குவிந்து கிடப்பது ஒருபுறம் இருக்க அவற்றைத் தனக்கு அடிபணிய வைத்துப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மனித வளம்தான் இல்லையா?

பிறகு ஏன் இந்தியாவில் இத்துணைக் கொடிய இருள் மூட்டம்? ஏழைமைத் தீக்கொழுந்துகள்?

வண்டி அழகானது; வலுவானது மாடுகளும் திடமானவை; சுறுசுறுப்பானவை; ஆனல் போக வேண்டிய ஊருக்கு — போக வேண்டிய நேரத்தில் — ஓட வேண்டிய வேகத்தில் வண்டி ஓடவில்லை என்றால் என்ன பொருள்?

ஒன்று வண்டியை ஓட்டுகிறவன் திறமையற்றவனாக இருக்க வேண்டும்; அல்லது பயணம் புரிகின்ற பாதை பள்ளம் — படுகுழிகள் நிரம்பியதாக இருக்க வேண்டும்.

இந்தியப் பொருளாதார வண்டியைப் பொறுத்த மட்டில் — வளங்களுக்கோ அந்த வளங்களை ஒருங்கு சேர்க்கும் உழைப்புக்கோ குறைவு இருப்பதாகக் கூற முடியாது. எனவே, கடந்த முப்பது ஆண்டுக் காலமாக மைய அரசிலே 'ஓட்டுநர்' பொறுப்பிலே இருந்தவர்களிடமும் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையிலும்தான் கோளாறு இருக்கிறது என்பதைத் தெளிவாக உணரலாம்.

## முதலாளித்துவ மோகம்!

இந்த அவல நிலைக்குப் பொறுப்பாளிகளாக ஆட்சிப் பதவிகளில் அமர்ந்த ஆட்சித் தலைவர்களை மட்டுமே குற்றம் சுமத்த முடியுமா? அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கிய அதிகாரத் தலைவர்களுக்கும் இதில் பங்கு உண்டு.

மைய அரசிலே நிதி அமைச்சர்களாக இருந்தவர்கள் புரிந்த தவறுகள் ஒருபங்கு என்றால், அதே நிதித்துறையிலும் அதனைச் சார்ந்த 'ரிசர்வ் வங்கி'யிலும் பணியாற்றிய அதிகாரிகள் புரிந்த தவறுகள் இரு மடங்குகள் ஆகும்.

(தொடர்ச்சி 10 ம் பக்கம்)

## நூதன தி(ருட்டு)ணிப்பு

இந்தியாவில் தயாரிக்கப்படும் மிக அருமையான கைக் கடிகாரங்கள் வெளிவருவது பெங்களூரில் இருக்கும் எச்.எம். டி. நிறுவனத்திலிருந்து தான் இக்கடிகாரங்கள் வெளிநாட்டில் அதிகமாக விற்பனை ஆவதாகக் கூறுவார்கள், இந்தக் கடிகாரங்களில், கிழமை, தேதி காட்டும் பாகத்தில் கிழமை எப்போதும் ஆங்கிலத்தில் தான் இருப்பது வழக்கம்

ஆனல் தற்சமயம் தயாரித்து வெளியிடும் கடிகாரங்களில் கிழமையை இந்தி எழுத்தில் நூதனமாகத் திணித்துள்ளார்கள். இந்தி திணிப்பு கிடையாது என பிரதமர் கூறும் வேளையில் கடிகார நிறுவனத்தினரை மத்திய அரசு தூண்டுவதால் நூதனமாக இந்தி திணிக்கப்படுகிறது. என நாம் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

எந்த விதத்திலாவது, திருட்டுத்தனமாக இந்தியை நுழைக்கும் போக்கைக் கண்டிக்க வேண்டும்!

தகவல்:

காரைக்குடி திராவிடமணி

# புகழேந்தி

**கருணாநிதி**



விஞ்ஞான ஆராய்ச்சியிலே அவனுக்கு நிகர் யாருமில்லை. இந்தியாவின் ஈன்ஸ்டின் என்று உபகண்டம் பாராட்டுப் படித்தது. சரித்திர ஆராய்ச்சியின் கரையைக் கண்டவன் அவன். சார்லஸ் ஆண்டபோது நடந்ததைக்கூறவேண்டுமா? ஷாஜகானின் குணநிசயங்களை ஒன்றுவிடாமல் சொல்லவேண்டுமா? நாசர் காலமா? சீசர் வீரமா? எல்லாமே அவனுக்கு மனப்பாடம்! சுருங்கச் சொன்னால் அவனே ஒரு சரித்திரப் புத்தகம்!

இலக்கியத்திலே எது பற்றி அவனிடம் விவாதிக்க வேண்டும்? எதற்கும் தயார்! கவிதைத்துறையிலே கம்பனா? ஷெல்லியா? காளிதாசனா? டென்னிசனா? பைரனா? பாரதியா? யாரைப்பற்றியும் கருத்துரைகள் வழங்குவதிலே அவனுக்குநிகர் யாருமில்லை என்பது மட்டுமல்ல; அந்தக் கவிதா மண்டலத்தோடு போட்டியிடவும் திறமை பெற்றவன். பொருளாதாரம் பற்றி விளக்கம் தேவையா? காரல் மார்க்ஸ் அனுப்பி வைத்த தூது போலத்தொடங்கிவிடுவான், பொருளாதாரப் பிரசங்கத்தை.

அமெரிக்காவின் ஆஸ்தி என்ன? இரஷ்யாவின் இரகசியம் என்ன? இதுபோன்ற விவரங்களை மிக எளிதில் கற்றுத் தர வல்லோன்! கணிதத்திலோ மேதை! பூகோளத்துப் புலி; அரசியலிலே அவனோர் பிளேட்டோ! சமுதாயத்திலே சாக்ரட்டீஸ்! எழுத்திலே பெர்னட்ஷா—ஷேக்ஸ்பியர் இருவரின் கூட்டு! பேச்சிலே டெமாஸ்தனிஸ் — இங்கர்சால் இருவரின் கலப்பு! இத்தகைய மேதை புதிய பாதை வகுத்தவன்! அவனது பெயர் கூறவே மக்கள் தயங்குவார்கள்— பெயரைக் கூறுவது அவன் பெருமையை இழிவுபடுத்துமோ என்ற சந்தேகத்தால்!

ஆகவே அவனை மேதை என்றே அழைத்தது இந்த மேதினி.

சில புலவர்கள் கூட அழகாகச் சொல்லுவார்கள் அவனது பெயரைப்பற்றி. "மே" என்பது உலகத் தொழிலாளரின் உற்சவ தினம்" "தை" என்பது தமிழரின் உழைப்பு வெற்றிதினம் ஆகவே இரண்டு பெருந்திருநாட்களும் சேர்ந்தமைந்த பொருத்தமான பட்டம் "மேதை' என்று! நமது சிந்தை கவர்ந்தவனுக்குச் சிறப்பான பெயர் அமைந்துவிட்டது என்று கூறி மகிழ்வர் பல்லோர். வயதோ முப்பது நிறையவில்லை; வாலிபத் தென்றல்! அதற்குள்ளாக அவனுக்கு வந்து குவிந்த புகழோ பெருங் குன்றம்!

அவனைச் சுற்றி வாழ்த்துப் பாடியபடி எந்நேரமும் இருப்பர் மாணவரும், தொழிலாளரும், பண்டிதரும், பாமரரும்! தனக்கு எத்துணைப் பெருமை வளர்ந்திருக்கிறது என எண்ணும்போது மணக்கும் அவன் நெஞ்சம், புகழ் கண்டு பூரிப்படைவான். ஆனாலும் அவன் உள்ளம் புகையும் எரிமலை போல இருந்ததை அவனால் மறைக்க முடியவில்லை. மறைப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டான்!

புகழ்! புகழ்!! புகழ்!!

யாருக்கு வேண்டும் இந்தப் புகழ்? சரித்திர விற்பன்னன் ஜகம் புகழும் பூகோளமேதை கணிதநிபுணன்— கவிஞருக்கு மன்னன் — எழுத்து வேந்தன் என்றெல்லாம் உலகம் உளறுகிறது; அவனைப்பற்றி! ஆனால், அவனோ துடிச்துக் கிடக்கிறான். "தொலையாதோ இந்தப் புகழ்" என்று மனம் வெடித்துச் சாகிறான். காரணம், அவனால் தனியே எங்கும் போக முடியாது.

மாலை நேரத்தில் கடற்கரையில் உலவி வரலாமா? முடியாது! கூடாது என்று தடையல்ல; அவன் போக முடியாதபடி புகழ் அவனைத் தடுத்தது. நூறு ஆயிரம் என்று மக்கள் சூழ்ந்துகொள்வர். "மேதை" வந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவும். தனிமையை நாடி வந்த அவன் புகழ் தரும் தலைவலி தாங்காமல் ஓட்டமாக ஓடி வீட்டுக்குப் போய் விடுவான், ரயிலில் போக முடியாது; கடைத்தெருப் பக்கம் தலைகாட்ட இயலாது கண்காட்சிச் சாலைகளில் காலடி எடுத்து வைக்க முடியாது. புகழ்—புகழ்— புகழ் எங்கும் புகழ்! அந்த மேதையின் நற்பண்புகள் பற்றிப் பேசாதார் இல்லை,

★

காதலனும் காதலியும் கொஞ்சிடும் அந்த அழகான நந்தவனத்தைப்பற்றி உணர்ச்சி பொங்கிட வர்ணித்திருக்கிறானே; அந்த ஒய்யார வனத்திலே உல்லாச கீதம் பாடும் ஜீவஜோடிகளை யாரும் சித்தரிக்காத வண்ணம் சித்தரித்து எழுதியிருக்கிறானே; படிக்கும் போதே நமக்கு ஒருபோதை தோன்றுகிறதே; அதை எழுதும் போது அவன் நிலை எப்படி இருந்திருக்கும்? — இப்படியெல்லாம் எழுதுவது போன்ற கற்பனையை வாழ்நாளில் தத்ரூபமாகச் சந்திக்க வேண்டுமென்று அவன் விரும்ப மாட்டானா? அந்த இன்ப விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்திருக்க மாட்டானா? அந்தத் தவிப்பின்போது ரோஜா கிடைக்காவிட்டால் ஒரு கனகாம்பரம் என்ற அளவுக்குத் தன் ஆடையை விரித்திருக்க மாட்டானா?

—என்றெல்லாம் அவனைப் பற்றிப் பேசினர்

" ஆச்சரியம்தான்! நீ நினைக்கிறபடியோ சந்தேகங் கொள்ளுகிறபடியோ அந்த மேதை வழுக்கி விழுந்து விடுகிறவனல்லன்! நிச்சயம் அத்தகைய வழியில் அவன் இறங்க மாட்டான்' என்று உறுதியோடும் பலர் பதிலுரைத்தனர்!

"நல்லொழுக்க சீலன் என எப்படி நவில முடியும்? நாடு பல சுற்றியிருக்கிறான்?''

" ஏடு பல கற்றிருக்கிறான். ஏன் அவன் சற்குணனாய் இருக்க முடியாது?' இப்படிக் கேள்வியும் பதிலும் மாறி மாறி!

" தான் எதிர்பார்த்து நடைபோடும் அந்த இலட்சியம் கைகூடும் வரையில்— உலகத்திற்கு அந்த ஒப்பற்ற பரிசை வழங்கும் வரையில் அவன் திருமணமே செய்து கொள்ள மாட்டானாம்!''

இந்தப் பிரச்சாரமும் பரவியது. அவன் அப்படிச் சொன்னானோ இல்லையோ— எல்லோரும் அப்படித்தான் நம்பிக் கொண்டிருந்தனர். அவன் சொல்லாததையெல்லாம் மக்கள் சொல்லுவர். அதைப்பற்றிப் 'புகழ்வர்' அவனும் வேறுவழியின்றி "ஆமாம் சொன்னேன்'' என்று ஊத்துக் கொள்வான்.

" இலட்சியம் கைகூடும் வரையில் உறங்கவும் மாட்டாராம்'' இப்படிப் பிரச்சாரம் நடைபெறும். அன்பின் மிகுதியால் கிளம்பும் வதந்தி. அவனைப் போய்க் கேட்பர். "உங்கள் இலட்சியம் கைகூடும் வரையில் உறங்க மாட்டீர்களாமே! ஆகா. என்ன உறுதி! என்னஉறுதி!' எனப் புகழ் பாடியபடியே!

" இல்லை, இல்லை – எனக்கு அப்படியெல்லாம் இலட்சியத்தில் மோகமில்லை!'' என்று அவனால் சொல்ல முடியும்? முடியாது. ஆகவே "ஆமாம், உறங்க மாட்டேன்'' என்பான். அதற்காகத் தன்னைச் சுற்றியிருப்போர் தூங்கிய பிறகு நாற்காலியில் உட்கார்ந்தபடியே எதையோசிந்திப்பதுபோலத் தூங்கிக் கொண்டிருப்பான். பாவம்! அதுவும் அமைதியற்ற அரைத் தூக்கம்.

" நமது மேதை நல்ல வேட்டி சட்டைகூட உடுத்துவதில்லை — அவருடைய எண்ணமெல்லாம் உலகத்திற்கு ஒரு புதிய வழி காண வேண்டுமென்பதிலேயே லயித்துக் கிடக்கிறது'' என்பர் சிலர்.

" இல்லை, இல்லை – நான் ஆடம்பரமாக உடை உடுத்துவேன்'' என்று அவன் கூற முடியும்? முடியாதே பாவம் அதற்காக நாற்றத்தையும் தாங்கிக்கொண்டு அழுக்கு ஆடைகளை உடுத்துவான்.

" பெரிய மகானுக்கும் நமது மேதைக்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை – பெண் என்றால் திரும்பியும் பார்ப்பதில்லையே இவர்!' என்று அதிசயமாகப் பேசியவர் பலர்.

" உம்—பெண்ணாவது மண்ணாவது! என்று மேதையும் அவர்களோடு சேர்ந்து பேசுவான். பேசத்தானே வேண்டும், அவனுடைய பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள!

மேதை ஒரு நாள் வெளியூருக்கு அழைக்கப்பட்டிருந்தான் – கல்லூரி ஒன்றிலே 'விஞ்ஞான அறிவு' என்ற தலைப்பிலே சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக! கல்லூரித் தலைவரின் வீட்டிலேயே தங்கியிருந்தான். யாரும் தொந்தரவு கொடுக்காமலிருப்பதற்காகத் தனியாக மேல்மாடியில் மேதைக்கு இடவசதி செய்து கொடுத்திருந்தார் கல்லூரித்தலைவர். கல்லூரியில் மேதையின் சொற்பொழிவு நடைபெற்றது. விஞ்ஞானத்தின் பெருமைகளை அவனுக்கே உரிய அழகுநடையில் அவனால் மட்டுமே விளக்க முடியும் என்ற அத்தனைப் பெரிய கருத்துக்களை மாணவர்களிடையே வாரியிறைத்தான் மேதை.

கூட்டத்திலே மாணவிகளும் அதிகமிருந்தனர். அந்த முல்லைக்கொல்லையின் நடுவே அழகு ரோஜா ஒன்றும் இருந்தது. மேதையின் பேச்சையும் அவனது கட்டுக்குலையாமேனியின் அழகையும் அந்த ரோஜாப்பூ தன்னிரு செவிகளாலும், விழிகளாலும் முறையே விழுங்கிக்கொண்டிருந்தது. மேதையின் பார்வையும் இரண்டொரு முறை அந்த அழகியின் மீது பாய்ந்தது. ஆனால் பாய்ந்த வேகத்தில் மீண்டது. அவன் அவளை இலட்சியம் செய்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. சொற்பொழிவு முடிவுற்றது, மேதையை மாணவர்கள் சூழ்ந்து கொண்டனர். அனைவரிடமும் பேசிவிட்டு மேதை கல்லூரித் தலைவரின் வீட்டுக்குப் புறப்பட்டான.

உணவு முடிந்த பின்னர் அமைதியை விரும்பி, மேதை மாடிக்குப் போனான். மாடியில் உலவிக்கொண்டிருந்தான். நல்ல நிலவு! உலவிக்கொண்டிருந்தவனுக்குக்கால் வலி எடுக்கவே நாற்காலியில் அமர்ந்தான். மேதையைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த பையன் ஓடி வந்து, மேதையின் கால்களை அழுக்கிவிட்டான். மேதையின் வலி கண்ட கால்கள் பையனின் பணிவிடையால் சுகம் பெற்றன,

மேதையின் கண்கள் கட்டவிழ்த்துக் கொண்டு இங்குமங்கும் திரிந்தன. எதிர்த்த வீட்டு மாடியிலே கல்லூரியிலே கண்ட அந்த ரோஜா நின்று கொண்டிருந்தாள். அவள் மேதையையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து புறப்படும் அந்தக் காதற்கணைகள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை ஆனால் அவை மேதையை அசைக்கவும் முடியாதவை என எண்ணிவியந்தாள் அந்த ரோஜா! மேதைக்குக் கால் அழுத்திவிட்ட பையன்வேலை முடிந்து வெளியே போனான். போனவன் எதிர்த்த வீட்டு மாடிக்கு எப்படிப்போனானோ தெரியவில்லை. அந்த மாடியைப் பார்த்துக்கொண்டிருந்த மேதையின் கண்களிலே ஒரு காட்சி தெரிந்தது.

தனக்குக் கால்பிடித்த பையன் எதிர்த்த வீட்டிலே அந்தக் கல்லூரி ரோஜாவுடன் ஏதோ பேசுகிறான் அவளும் மெதுவாக ஏதோ கூறுகிறாள்: பிறகு அந்தப் பையனுடைய கைகளை எடுத்துக் கண்களிலே ஒத்திக் கொள்கிறாள்.

அந்தக் காட்சியை மேதை கண்டான். "லட்சியம் ஈடேறும் வரையில் பெண்களைத் திரும்பியும் பாரார்! திருமணமும் வேண்டார்!'' என்று ஊரார், உலகத்தார் பேசிய புகழ் உரைகள் அவன்காதில் ஒலித்தபடியிருந்தன,

மறுநாள் காலையில் பையன் வந்தான், அவனுக்குக் காலைப் பணிவிடைகள் புரிவதற்காக! அப்போது மேதை அவனிடம் கேட்டான்:

" நேற்றிரவு அந்தப்பெண் உன் கைகளைக் கண்களில் ஒத்திக்கொண்டாளே, ஏன்?'' என்று,

" நான் உங்கள் கால்களைப் பிடித்தேனல்லவா? அதனால் என் கைகள் மிகவும் பாக்கியம் செய்த கைகளாம்; அதனால் என் கரங்களை அவள் கண்களில் ஒத்திக்கொண்டாள்!' என்று பையன் நிலைமையை விளக்கினான்.




மேதை ஒன்றும் பதில் சொல்லவில்லை. நினைத்துக் கொண்டான். " நான் அவள் கால்களையே கண்களில் ஒத்திக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவளோ, என் காலில் பட்ட உன் கரங்களை முத்தமிடுகிறாள்! நல்ல புகழப்பா இது! பொல்லாத புகழ்—என்னைக்கொல்லாமல் கொல்லுகிறது!'' என்று அவன் ஆயிரம் முறை தனக்குள்ளாகவேமுணுமுணுத்துக் கொண்டான்.

அதற்குள்ளாக அந்தப் பெண்ணும், எதிர்வீட்டுமாடியில் உதயமானாள். மேதையை வழியனுப்புவதற்காகஐம்பது மாணவரும் ஆசிரியர்பத்துப் பேரும் மாடிக்கு வந்துவிட்டார்கள். மேதை, எதிர்வீட்டு மாடியை ஏறெடுத்தும் பாராமல் காரியங்களை முடித்துக் கொண்டு ஊருக்குப்புறப்பட்டான்.

"மேதை வாழ்க!'' என்ற முழக்கத்துடன் மாணவர்களும், ஆசிரியர்களும் கலைந்தார்கள்.

★



# தலைமைச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள்!

**தி. மு. கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 14—10—78 நாளன்று கழகத் தலைவர் கலைஞர் தலைமையில் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன.**

நேருவின் வாக்குறுதி நிலை நாட்டப்படும் என்று ஒரு புறத்தில் கூறிக்கொண்டே இந்தியை மறைமுகமாக இந்தி பேசாத மாநில மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திட வைக்கும் போக்கை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, என்றென்றும் இந்தியை எதிர்க்கும் அரணாகத் தி. மு. க. திகழும் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது. தமிழ்நாட்டு மக்கள் நாற்பது ஆண்டுக் காலமாக இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தி வரும் போராட்டத்தைத் தொடர்ந்து, இனியும் போராட வேண்டிய சூழ்நிலையில் தள்ளப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, மொழிப் பிரச்சினை குறித்து தமிழ் மக்கள் கொண்டுள்ள உணர்வை எதிரொலிக்கும் வகையில் இந்திஎதிர்ப்புமாநாட்டை மாநில அளவில் திருச்சியில் டிசம்பர் திங்களில் நடத்துவதென்று இச் செயற்குழு முடிவு செய்கிறது.

## சர்வாதிகாரத்தனமான மதுவிலக்கு அவசரச் சட்டம்

மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகிறோம் என்ற பெயரால் முரண்பாடு மலிந்ததும் மூர்க்கத்தனமானதுமான ஒரு சட்டத்தை — சட்டப் பேரவையில் விவாதித்து தகுந்த திருத்தங்களோடு கொண்டு வருவதற்கான வாய்ப்பு இருந்துங்கூட அவ்வாறு செய்யாமல் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்திருப்பதுஇந்த அரசின்சர்வாதிகாரப் போக்கை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அவசரச் சட்டம் வருவதற்கு முன்பு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட சில முக்கியமான அம்சங்கள் சட்டத்தில் இடம் பெறுதிருப்பது கண்டிக்கத்தக்கது. எதிர்க்கட்சியினரையும், தங்கள் சொந்தக் கட்சியினரையும் பழிவாங்கவும்மிரட்டவும் தேவையான பிரிவுகளைக் கொண்ட இந்த அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக நிறுத்திவைத்து சட்டசபையில் விவாதித்து மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகிற வகையில் முறையான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று இச்செயற்குழு மாநில அரசை வலியுறுத்துகிறது. இந்த அவசரச் சட்டத்தில் உள்ள முரண்பாடுகள்பற்றியும்எதேச்சதிகாரத்தன்மை குறித்தும், மதுவிலக்கு பற்றி உதட்டளவில் தீவிரமாகப் பேசுகிற ஆளுங்கட்சியினர்தான் பெரும்பாலும் மதுவிலக்குச் சட்ட மீறல்களை அதிகாரிகளின் துணையோடும், அமைச்சர்களின் ஆசியோடும் செய்து வருகிறார்கள் என்பது பற்றியும் கட்டுரைகள் வாயிலாகவும், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் மூலமாகவும் நமது கழக அமைப்புக்கள் பொதுமக்களுக்கு எடுத்து விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

## ஊதியக்குழு பரிந்துரை: மறு பரிசீலனை தேவை

தமிழ்நாட்டு அரசு அமைத்த மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் சரிவர நடைமுறைப்படுத்தவில்லையென்றும் — அரசாங்கம் அறிவித்துள்ள ஊதிய உயர்வுகள் போதுமானவைகளாக இல்லாததோடு பல பணியாளர்களின் துவக்க நிலை ஊதியமே குறையும் வகையில் முரண்பாடு கொண்டவைகளாக விளங்குகின்றன என்றும் — எனவே அரசு, தன் முடிவை மறு பரிசீலனை செய்திட வேண்டுமென்றும் அரசு அலுவலர்களின் சங்கங்கள் ஆசிரியர் சங்கங்கள் விடுத்துள்ள வேண்டுகோளை அரசு புறக்கணிக்காமல் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று இச் செயற்குழு வலியுறுத்துகிறது.

## மாநில சுயாட்சி கலந்துரையாடல்

அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்ததும்; தி. மு. கழகம் தனது சட்திட்டத்தில் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக இடம்பெறச் செய்யப்பட்டதும், தி. மு. க தேர்தல் அறிக்கைகளில் மக்களுக்கு எடுத்துக்கூறப்பட்டதும், இந்தியாவிலேயே முதன் முதலாக கழக ஆட்சிக் காலத்தில் சட்டப் பேரவையில் தீர்மான வடிவம் பெற்றதுமான மாநிலத்தில் சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்ற தத்துவத்தை விரைவில் செயல்படுத்த மத்திய அரசினரை வலியுறுத்துவதோடு மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் இந்தக் கோரிக்கை பற்றி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களோடும் கலந்துரையாடி செயல்படுத்த முன்வர வேண்டுமென்று இச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## புதுவை அரசு நீடிப்பது ஜனநாயகத்திற்குப் புறம்பானது!

புதுவை மாநிலத்தில் நடைபெறுகிற அ. தி. மு. க. அரசு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை இழந்துவிட்ட நிலையிலும் இன்னும் பதவி விலகாமல் இருப்பது ஜனநாயகத்திற்கே புறம்பானது என்று குற்றம் சாட்டுவதோடு—நிலையற்றுத் தள்ளாடும் அந்த அமைச்சரவை உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று புதுவை மாநிலத்தில் அனைத்துக்கட்சி சார்பில் நடைபெறும் அறப்போராட்டத்தை இச் செயற்குழு வரவேற்கிறது.

## ஆளுங்கட்சி குண்டர்களின் அராஜகப் போக்கு!

தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கும் சீர்கெட்டு அச்சமும் பீதியும் அமைதியின்மையும் அரசோச்சும் நிலை உருவாகியிருக்கிறது. நாளுக்கு நாள் பெருகிவரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரியதிட்டமோதெளிவோ வரையறுக்கப்பட்ட கொள்கையோ ஆளுங்கட்சியிடம் இல்லாத காரணத்தால் அதிகார வர்க்கமும் சமூக விரோத சக்திகளும் கட்டுப்பாடற்ற முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முறை கைவிடப்பட்டு, ஆயுதம் தாங்கிய போலீசையும், ஆளுங்கட்சியின் 'குண்டர் படை'யையும் பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மற்றும் போராடும் அனைவருக்கும் எதிராக ஏவிவிடும் நிலைஉருவாகியிருக்கிறது. இதனால்பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் போராடும் மக்களின் உரிமைகளுக்கும் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சிக்கும் ஜனநாயக நெறிமுறைகளுக்கும் திட்டமிட்ட முறையில் சாவுமணி அடிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள், மின்வாரிய ஊழியர்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள் போன்ற அனைவருக்கும் எதிராக 'பொதுமக்கள்' என்ற பெயரால் எம். ஜி. ஆரின் குண்டர்படை ஏவிவிடப்பட்டதையும், தாக்குதலுக்கு உள்ளான உழைக்கும் மக்களுக்கு எதிராகவே பொய் வழக்குகள் புனையப்பட்டதையும், உரிமைகள் மறுக்கப்பட்டதையும் நாடு நன்கறியும்.

நேற்று, நியாயம் வழங்கக் கோரி கோட்டைக்கு ஊர்வலம் சென்ற டி. ஐ. சைக்கிள் தொழிலாளர் மீதும் உண்ணாவிரதம் இருந்த டி. வி. எஸ் தொழிலாளர் மீதும் எந்தப் பாவமும் அறியாத தாய்மார்கள் மீதும் கைக் குழந்தைகள் மீதும் காவல் துறையினரும் கைக்கூலிகளும் கண்மூடித்தனமான தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் இதே. போன்று பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் போராட்டத்தின் போது காவல்துறையினரின் உதவியோடு ஆளுங்கட்சியின் குண்டர் படை சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பேயாட்டம் ஆடியது. போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைகள் அனைத்திலும் ஆளுங்கட்சியின் குண்டர்படை குவிக்கப்பட்டது. கத்தி, கம்பு, சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்களால் தொழிலாளர்கள் வெறித்தனமாகத் தாக்கப்பட்டார்கள். காவல்துறை மேலதிகாரிகளின் கண் எதிரிலேயே கழகத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் 'குண்டர்களால்' கொடூரமாகத்தாக்கப்பட்டார்கள். வேலைக்கு வர மறுத்த தொழிலாளர்களை வீடு புகுந்து இழுத்து வந்து பொய்வழக்குகளைப் போட்டு சிறையில் அடைத்திருக்கிறார்கள், போலீசாரின் ஜீப்புகளும், போக்குவரத்துக் கழக வாகனங்களும் குண்டர் படையினரால் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன, போக்குவரத்துக் கழகத்தின் பணத்தில் 'குண்டர் படைக்கு' மதுவும் உணவும் பகிரங்கமாகப் பரிமாறப்பட்டது; மோதலில் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சில குண்டர்களை மாத்திரம் அமைச்சர் பொன்னையன் நேரில் சென்று பார்வையிட்டு சிறப்பான மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். முதலமைச்சர் அந்தத் "தியாகிகளுக்கு" எல்லா உதவிகளும் செய்யுமாறு உத்திரவிட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். குண்டர் படை யாருடைய அரவணைப்பில் இயங்குகிறது என்பதைஎடுத்துரைக்கும் வகையில் அமைச்சரின் பேச்சும் செயலும் அமைந்திருக்கிறது. மருத்துவமனைக்குச் சென்ற அமைச்சர் தாக்குதலுக்கு உள்ளான தொழிலாளர்களைப் பார்க்கவில்லை. அவர்களுக்கு அனுதாபம்கூடத் தெரிவிக்கவில்லை. போராடும் தொழிலாளர் மீது போர்ப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. போராட்டத்தையொட்டி கைது செய்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை ஜாமீனில் விடுவதற்காக அரசுத் தரப்பினர் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். போராட்டம் திரும்பப் பெறப்பட்ட நிலையிலும் அரசின் பழிவாங்கும் போக்கு மாறவில்லை. குண்டர் படையின் அத்துமீறிய செயல்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. காவல்துறை செயலிழந்த நிலையில் மேல்மட்ட அதிகாரிகளால் ஆட்டிப்படைக்கப் படுகிறது. குண்டர் படையின் வெறிச் செயல்களுக்கு ஆதரவாகச்செயல்பட்டு வருகிறது. மக்களிடையே அச்சமும் பீதியும் குடிகொண்டிருக்கிறது.

இந்நிலைக்குமுற்றுப்புள்ளிவைத்து ஜனநாயக நெறிமுறைகளைக் காக்கவும், மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புத் தேடவும் அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற் சங்க இயக்கங்களும், ஜனநாயக சக்திகளும் ஒன்று திரளவேண்டும் என்றும் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# தலைமைச் செயற்குழு நிறைவேற்றிய....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இந்தச்செயற்குழு வற்புறுத்துகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கவும் உறுதுணையாக நிற்கவும் மக்கள் உரிமைப் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதோடு ஆளுங்கட்சியினரின் அராஜகச் செயல்களுக்கு எதிராகப் பொதுமக்களின் சக்தியைத் திரட்டுமாறு கழக அமைப்புகளை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

மாலை நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

## இளஞ்செழியன் படுகொலையைகண்டித்து அக். 24 மதுரையில் ஊர்வலம் பொதுகூட்டம்

கடந்த 8-10-78 இரவு திருவில்லிபுத்தூர் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பும் வழியில் கழகப் பேச்சாளர்களான பழக்கடை பாண்டி, சங்கரபாண்டியன், வாழவந்தான், துரைப்பாண்டி, இளைஞன் இளஞ்செழியன் ஆகியோரை ஆளும் கட்சியினர் திட்டமிட்டுக் கற்களால் தாக்கியதோடு, தங்கள் கொலை வெறிச் செயலுக்கு சிகரம் வைத்தாற்போல் இளஞ்செழியனை கல்லால் அடித்து மண்டையைப் பிளந்து கொன்றிருக்கிறார்கள். இதுபற்றி உடனடியாகக் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து அந்தக் கொலை வெறியர்களைக் கைது செய்யாமல் காலங்கடத்துவதை இச்செயற்குழுகண்டிக்கிறது வழக்குப்பதிவு செய்திருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கும் வேளையில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உண்மையை மறைத்து ஆளுங்கட்சியினரைப்பாதுகாக்கும் முறையில் விடுத்துள்ள அறிக்கையை இந்தச் செயற்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் கொலை வெறியையும், இது குறித்து நடவடிக்கை எடுக்காத எம். ஜி ஆர். அரசையும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பொய்யான அறிக்கையையும் கண்டிக்கும் வகையில் வரும் அக்டோபர் 24-ஆம் நாள் மதுரையில் மாபெரும் கண்டன ஊர்வலமும், கண்டனப் பொதுக் கூட்டமும் நடத்துவதென்றும் அந்தக் கூட்டத்தில்கழகத்தலைவரும், பொதுச் செயலாளரும் கலந்துகொள்வதென்றும் இச் செயற்குழு முடிவு செய்கிறது.

## சட்டம் — ஒழுங்கு சீர்குலைவைக் கண்டித்து நவ. 5 எச்சரிக்கைக் கூட்டங்கள்

அ, தி, மு. க; ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பாதகமான காரியங்களும் அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலையும் மாநிலம்முழுதும் பரவலாக இருப்பதும் — அந்த நிலை நீடிப்பதும் வேதனைப்படத்தக்கதாகும். கலவரங்கள் கற்பழிப்புக்கள் அரசியல்கொலைகள். அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன என்பதும் வருந்தத்தக்கதாகும். இவ்வாறு தமிழ் நாட்டின் சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுக்கொண்டு வருவதற்கான நிலையைத் தடுத்து நிறுத்த தி. மு. கழகம், முதற்கட்டமாக நாடெங்கும் நவப்பர் 5-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கைக் கூட்டங்கள் நடத்துவதென்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

## சப்தி—ஏலம் போன்றவற்றால் விவசாயிகளைத் துன்புறுத்தாதீர்

தமிழ் நாட்டில் விவசாயக்கடன்களை வசூலிப்பதில் அரசு ஜப்தி, ஏலம் போன்ற நடவடிக்கைகளின் மூலம் விவசாயிகளைக் கடந்த 3 மாத காலமாக துன்புறுத்தி வருவதை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடுமாறு தமிழக அரசை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## ஜனநாயகம் தொடர்ந்து காக்கப்பட வீரேந்திர பட்டீலுக்கு கழக ஆதரவு

நவம்பர் 5-ஆம் நாள் கருநாடக மாநிலத்தில் சிக்மகளூர் நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல் ஒரு அரசியல் முக்கியத்துவம்வாய்ந்ததாகும், அதில் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், கருநாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் வீரேந்திர பட்டீலும் போட்டியிடுகிறார்கள். இந்திய அரசியல்வானில் சர்வாதிகார கார் மேகங்கள் ஜனநாயகத்தை மூடிய போது அதனைக் கலைப்பதற்காக நடைபெற்ற இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் கழகத்திற்கு பெரும் பங்கு உண்டு. அந்தப் போராட்டத்தில் சர்வாதிகார சக்தியை எதிர்த்து ஜனதாவும் திராவிட முன்னேற்றக் கழகமும் பல்வேறு தியாகங்களை புரிந்து வெற்றி வாகை சூடியிருக்கிறது. இருப்பினும் மத்தியில் ஜனதா அரசு அமைந்தபிறகு தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தயக்கமும். தாமதமும் ஏற்பட்டது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது, ஜனதா கட்சியில் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்த பலரும் இந்த உண்மையைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அந்த உண்மையை நமது கழகத்தின் சார்பிலும் பலமுறை சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். இந்தத் தேர்தலில் தேசிய பிரச்சினைகளையும். சர்வாதிகார நடவடிக்கைகளையும் அவ்வளவு எளிதில்யாரும் மறந்துவிட முடியாது. இந்த பின்னணியில் கழகத்தின் ஆதரவைகோரி ஜனதாக் கட்சியின் வேட்பாளர் வீரேந்திர பட்டீல் அவர்கள் கழகத் தலைவரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியிருக்கிறார், தன்னை ஆதரிக்கக்கேட்டுக் கடிதமும் அளித்துள்ளார். சிக்மகளூர் தொகுதி தேர்தல் ஜனதா கட்சிப் பொறுப்பாளராக இருக்கும் மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் கழக ஆதரவு கேட்டு இன்று கடிதம் அனுப்பியுள்ளார். கருநாடக மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது நமது உயிர் மூச்சான மாநில சுயாட்சிகொள்கையை வலியுறுத்திப் பேசியவர்களில் வீரேந்திர பட்டீல் அவர்கள் குறிப்பிடத்தகுந்தவராவார். வீரேந்திர பட்டீல் போன்றவர்கள் ஜனதா கட்சியில் செல்வாக்குப் பெறுவது ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும் தேர்தல் காலத்து வாக்குறுதிகளை நிலைநிறுத்தவும் பெரிதும் உதவும் என்று திராவிட முன்னேற்றக்கழகம் உறுதியாக நம்புகிறது.

அந்த நம்பிக்கையுடனும், இந்தியாவில் 1975-ஆம் ஆண்டு ஜனநாயகத்தைக் காப்பாற்ற அதிகார பூர்வமாக முதல் குரல் கொடுத்த கட்சி தி. மு. க, என்ற நிலையிலும் சிக்மகளூர் நாடாளுமன்ற தொகுதியில் ஜனதா வேட்பாளர் திரு. வீரேந்திர பட்டீலை ஆதரிப்பது என்று இந்தச் செயற்குழு தீர்மானிக்கிறது.

## உள்ளாட்சி தேர்தல்கள் குறித்து ஆய்வு நடத்த கழக ஆய்வுக் குழுக்கள்.

ஊராட்சி ஒன்றிய—நகராட்சித் தேர்தல்கள் குறித்து ஆய்வு நடத்தி தலைமைக் கழகத்திற்கு அறிக்கை தருவதற்காக.-

**பின்வரும் ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன:**

(1) கோவை! சேலம், தர்மபுரி, நீலகிரி
தேவசகாயம் [தலைமையில்]
கமலநாதன் சேலம் அன்புக்கரசு

(2) நெல்லை. குமரி. மதுரை, கிழக்கு முகவை மேற்கு முகவை
நெல்லை நெடுமாறன் (தலைமையில்) சத்தியேந்திரன்.
அமுதன்

(3) தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை
அறந்தாங்கி இராசன் (தலைமையில்) சுப்ரவேலு எம். எல். ஏ. பரமத்தி சண்முகம்

(4) வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு,
மா. வெ. நாராயணசாமி, (தலைமையில்) ஆரணி கன்னையன், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி,

**சென்னை மாநகராட்சி**

ஜி. லட்சுமணன் எம். பி. (தலைமையில்)
அரங்கநாதன் எம். எல். ஏ.,
சு. பாலன் எம். எல். ஏ.,
டி. ஆர். பாலு,
ஓ. எஸ். பாலசுந்தரம்;

## விவசாயிகள் முன்னேற்ற சங்க அமைப்புக்குழு

மாவட்டந்தோறும் விவசாய அணிச் செயலாளர் வை. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் இணைந்து சென்று மாவட்டச் செயலாளர். ஒன்றிய செயலாளர்களின் உதவியோடு விவசாயிகள் முன்னேற்றச் சங்கங்களை அமைக்க பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

1. தோப்பூர் திருவேங்கடம்
2. திருப்பூர் முத்துரத்தினம்
3. இராமலிங்கம். எம். எல். ஏ. (குத்தாலம்)

## தமிழகஇரயில்வே கோட்டப் பகுதிகளை கேரளத்துடன் இணைக்காதீர்!

தென்பகுதி இரயில்வேயில் இப்போதுள்ள ஐந்து கோட்டங்களை அடுத்து திருவனந்தபுரத்தைத் தலைமையாகக் கொண்டு ஆறுவது கோட்டம் துவக்குவதென்றும் இப்போதைய மதுரை கோட்டத்தில் உள்ள பகுதியாகிய மணியாச்சி சந்திப்பும் அதற்கு அப்பாலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி, புதிதாக இரயில் பாதையால் இணைக்கப்படவிருக்கும் நாகர்கோவில், கன்னியாகுமரி ஆகிய தமிழ்நாட்டு பகுதிகளையும் புதிய திருவனந்தபுரம் கோட்டத்துடன் இணைக்கப் போவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புக்கள் பெரிதும் குறைவதோடு தமிழ் நாட்டைச் சேர்ந்த தற்போது இரயில்வேயில் பணியாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் கேரளப் பகுதிக்கு மாற்றப்படும் நிலையும், அதனால் அவர்கள் வாழ்க்கையும், குழந்தைகள் படிப்பும் பாழாகும் பயங்கர நிலை ஏற்படும், எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த பகுதிகளை ஏற்கனவே உள்ள மதுரை கோட்டத்துடனேயே தொடர்ந்து இருக்கும் வகையில் முடிவு எடுத்து அறிவிக்கும்படியும். ஏற்கனவே செய்துள்ள முடிவைக்கைவிடுமாறும். இந்திய இரயில்வேத்துறை அமைச்சரையும். மத்திய அரசையும் இச்செயற்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

# பெரியார் பெயரைச்சொல்லி பிழைப்புநடத்தும் எம்.ஜி.ஆர்.

பெரியாரின் நூற்றாண்டு விழாவை ஓராண்டு கொண்டாடப் போவதாக எம். ஜி. ஆர். அறிவித்திருக்கிறார். பெரியார் விழா கொண்டாடுவது அவருடைய கொள்கை மீது நம்பிக்கை வைத்தா? பெரியாருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறது. அவருடைய பெயரை வைத்துக் கொண்டு செல்வாக்குப் பெறலாம் என்பதற்காகவா?

பெரியார், மத மூட நம்பிக்கைகள் ஒழிந்து பகுத்தறிவு வளர வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். அவரைப் போன்று பிரச்சாரம் செய்தவர்கள் யாரும் இருக்க முடியாது. பெரியார் சீடர் என்றுசொல்லிக் கொள்கிறவர், பெரியார் பற்றிப் பேசுகிறவர் சங்கராச்சாரியிடம்சென்று ஆசி பெற்று வருகிறார்.

கோயில்களின் பேரால் மடங்களின் பேரால் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது அந்த நிலத்தைவைத்துக் கொண்டு ஏகபோக வாழ்க்கை நடத்துகிறார்கள்.

கோயிலுக்கும் மடங்களுக்கும் சொந்தமான நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று பெரியார் கூறிவந்தார்.

பெரியார் சீடர் என்று சொல்லிக் கொள்கிற அறநிலைய அமைச்சர் 'இது எங்களுக்கு ஒத்துவராது" என்கிறார். பிறகு ஏன் பெரியார் பெயரை வைத்து வேஷம் போடுகிறீர்கள்? உங்களுக்கு குரு பெரியாரா? சங்கராச்சாரியாரா? நீங்கள் பெரியார் சீடர்களா? சங்கராச்சாரியார் சீடர்களா?

**வலது கம்யூ. தலைவர் எம். கல்யாணசுந்தரம்**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையென்றால் இந்தியாவில் ஒரு தனியாளின் வருவாய் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் 1.2 விழுக்காடு மட்டுமே உயர்ந்திருப்பானேன்?

வெளிநாடுகளை நோக்கிக் கடனுக்கு மேல் கடன் வாங்க நாம் கையேந்தி ஓடுவானேன்?

இந்தக் கொடிய படுகுழி நிலைக்குக் காரணம் என்ன என்று இப்போதாவது நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எடுத்த எடுப்பில் நமக்குப் புலனாகக்கூடிய முதல்காரணம் இதுதான்.

நிதித்துறையை நிர்வகிக்க வந்த அமைச்சர்களும் சரி, அதிகாரிகளும் சரி — இந்திய மக்கட்தொகையில் முக்காலே மூன்று வீசம்' ஆக உள்ள வறிய மக்களின் 'பாட்டாளி மன உணர்வு' என்னஎன்பதே புரியாதவர்களாகப்பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க முற்பட்டார்கள். பிரிட்டன், அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார அமைப்பு முறைகளையே இங்கும் செயற்படுத்த முனைந்தார்கள்.

ஏனெனில், அவர்கள் பயின்றிருந்ததும் முதலாளித்துவப் பொருளாதாரம்தான்; அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் முதலாளித்துவ வாழ்க்கைதான்.

எனவேதான் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகவும், ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகவும் அவர்கள் வழிவகுத்து வந்திருக்கிறார்கள்.

### திட்டமிட்ட பொருளாதாரம்

திட்டமிட்ட பொருளாதாரம் இந்த நாட்டுக்குத் தேவை என்பதை விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற பண்டித ஜவகர்லால் நேரு உளமார உணர்ந்திருந்தார்

அவருக்கு இளமைக் காலம் முதல் கார்ல் மார்க்சு — ஏங்கல்ஸ் இவர்களின் பொதுவுடைமைக் கொள்கையில் பெருத்த ஈடுபாடு இருந்து வந்தது. மாவீரர் லெனின் அமைத்த சோவியத் நாட்டுப் பொதுவுடைமை ஆட்சியின் மீதும் மாபெரும் கவர்ச்சி இருந்தது

எனவேதான், சோவியத் ரஷ்யாவில் செயற்படுத்தப் பெற்ற ஐந்தாண்டுத் திட்டங்களைப்போலவே இங்கும் ஐந்தாண்டுத் திட்டங்களைவகுத்து இந்தியப் பொருளாதாரத்துக்கு ஆக்கம் அளிக்க நினைத்தார்; அதற்காகத் திட்டக் குழுவையும் அமைத்தார்.

(தொடரும்)

# குமுறும் எரிமலைமீது ஒரு கோமாளி!

'உங்கள் ஆட்சியில் எதைக் காட்ட முடிகிறது? திட்ட வளர்ச்சியைக் காட்டுகிறீர்களா? அணைகளைக் காட்டுகிறீர்களா? தொழிற்சாலைகளைக்காட்டுகிறீர்களா? பள்ளிகளைக் காட்டுகிறீர்களா?

ஒவ்வொரு முறையும் சபை கூடும்போது பிணக் குவியல்களைத்தானே காட்டுகிறீர்கள் ...

உங்கள் ஆட்சியில் எத்தனை முறை தடியடிப் பிரயோகம்? எத்தனை முறை துப்பாக்கிப் பிரயோகம்? எவ்வளவு அடக்கு முறை?

உங்கள் கரங்களில் இரத்தக் கரை படிந்துள்ளது!

நீங்கள் போலீஸ் ஆட்சி நடத்துகிறீர்கள்; ஜனநாயக ஆட்சி நடத்தவில்லை இந்த மாசு போக, நீதி பூர்வ விசாரணை வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்'

அடக்குமுறை ஆட்சிக்கெதிராக அறிஞர் அண்ணா அன்றொரு நாள் எழுப்பிய சங்க நாதம் இது.

13—2—58 நாளன்று அன்றைய காங்கிரசு ஆட்சியின் யதேச்சதிகாரமான போக்கைச் சாடி — கவர்னர் உரை மீது நடந்த விவாதத்தின் போது முழங்கிய அண்ணாவின் இந்தப் பேச்சு — இன்றைய அ. தி. மு, க. வினரின் ஆட்சி மீதும் சாட்டையடிகளாக விழுவதை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

ஆம் —

'குரங்கு கை பூமாலை' போல் அரசியல் கோமாளியான ஒரு நடிகரின் கரங்களில் ஆட்சி சிக்கிக் கொண்ட பிறகு —

இன்று திட்டங்கள் எதையும் காண முடியவில்லை!

காணுமிடமெல்லாம் சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுப் போன அவலத்தைத்தான் காண முடிகிறது!

அணைக்கட்டுகளையோ, ஆக்கபூர்வமான செயல்களையோ காண இயலவில்லை!

அச்சம், பீதி, அமைதியின்மை — இவைகளே கனத்த இருளேபோல் எங்கும் சூழ்ந்து விட்டது!

எழுகின்ற பிரச்சினைகளைப் பேசி, நல்ல முடிவு காணும் ஆற்றல் அற்றவர்கள் அரசாங்கம் நடத்துவதால் —

சமுதாய விரோத சக்திகள் அதிகார வர்க்கத்தின் அரவணைப்போடு 'அராஜகம்' நடத்திக்கொண்டிருக்கின்றன!

பச்சை குத்திய ஆளுங்கட்சி அடியாட்களும், ஆயுதந் தாங்கிய போலீசாரும் கைகோர்த்து, கட்டுப்பாடற்ற வன்முறைகளை நடத்தி வருகின்றனர்.

இந்திய வரலாற்றிலேயே நடிக முதல்வரைப் போல் வேறு எந்த அமைச்சரும் இவ்வளவு மோசமான தொழிலாளர் விரோதப் போக்கை ஒரு 'விரதம்' போல் கடைபிடித்து வந்திருக்க முடியாது என்பதை ஒன்றல்ல பற்பல சம்பவங்கள் மெய்ப்பித்து வருகின்றன!

ஃ ஃ ஃ

பஞ்சடைந்த கண்கள் — பரட்டைத்தலைகள் — சோர்ந்த முகங்கள் — மெலிந்த உருவங்கள் — இந்தப் பட்டினிப் பட்டாளங்கள் யார்? எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள்?

இவர்களெல்லாம் தொழி-

**பழனி சித்தார்த்தன்**

லாளர்கள்! ஆம் — டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள்!

கடந்த பத்து மாதங்களுக்கும் மேலாக மூட்டப்பட்டுக் கிடக்கும் அந்தத் தொழிற்சாலையைத் திறக்கக்கோரி கோட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்...

அந்த ஊர்வலத்தில் பள்ளி செல்லும் தொழிலாளரின் குழந்தைகளும், அவர்தம் வீட்டுப் பெண்களும் கூட அணி வகுத்து வருகிறார்கள்,

"தொழிற்சாலையை
உடனே திற!"

"தமிழக அரசே
வாக்குறுதியைநிறைவேற்று!!"

என்று-முழக்கமிட்டவாறேபட்டினிப் பட்டாளத்தின் ஊர்வலம் கோட்டை நோக்கிச் செல்கிறது.

திடீரென்று—

ஊர்வலத்தின் மீது ஏராளமான கற்கள் வந்து விழுகின்றன. அதைத் தொடர்ந்து— மத்திய ரிசர்வ் போலீசாரும், மாநில போலீசாரும் தொழிலாளர் குடும்பங்கள் மீது காட்டுமிராண்டிகளைப் போல் பாய்ந்து தாக்கத் தொடங்குகிறார்கள்.

போலீசாரின் முன்னறிவிப்பற்ற இந்த வெறிபிடித்த தாக்குதலிலிருந்து குழந்தைகளும், பெண்களும், கர்ப்பிணிகளும் கூடத் தப்பவில்லை

ஏ. எம். கோபு, கே. டி. கே தங்கமணி போன்ற தொழிற் சங்கத் தலைவர்களின் மார்பையும், தலையையும் நோக்கிப் போலீசார் சரமாரியாகத் தாக்குகிறார்கள்,

இதற்கிடையே—

போலீசார் தொடர்ந்து கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசுகிறார்கள்...

இதோ இன்னொரு காட்சி —

டி. வி. எஸ். நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கக் கோரியும், தமிழக அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி வலியுறுத்தியும் தொழிற் சங்கத் தலைவர் உண்ணாவிரதம் இருக்கும் பந்தல் குண்டர்களால் தீ வைத்துக் கொளுத்தப்படுகிறது.

அ.தி.மு.க. ஆட்சிஎவ்வாறு முதலாளிகளின் ஏவலாளாகச் சேவை செய்கிறது என்பதற்கு இன்னொரு எடுத்துக் காட்டு இதோ —

மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறப்பதாகக் கூறி தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்கும் அடிமைச் சாசனம் தயாரித்து அதில் கையொப்பமிட தொழிலாளர்களை வற்புறுத்துகிறது டி. ஐ. நிர்வாகம். இதற்கு ஒரு ஐவர் குழு! இதில் இடம் பெற்றிருப்

(12ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி ஆயிற்று. அதே நிர்வாக இயந்திரத்தை வைத்துக் கொண்டு அவர்கள் எதிர்க் கட்சிகளைம் பாதிப்புகளுக்கு ஆளாக்கினார்கள். எந்த நிர்வாக இயந்திரம் அண்ணாவைக் கலைஞரை இன்னபிற தலைவர்களை இன்னலுக்கு ஆளாக்கிற்றோ அதே நிர்வாக இயந்திரம் 67—க்குப் பிறகு அவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்தது. அதே நிர்வாக இயந்திரம்தான் கொஞ்சம்கூட மாற்றமின்றி இராமச்சந்திரன் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிர்வாக இயந்திரம் ஆளும் கட்சியின் கரத்திலே உள்ள ஆயுதமில்லை. அதிகாரிகள் ஆளும் கட்சியின் பாட்டிற்கேற்ப ஆடிடும் அணங்குகளில்லை. சட்டங்கள், விதிகள் முன்மாதிரிகள் (Acts, Rules and Precedents) ஆகியவைகளுக்குஏற்பச் செயல்பட வேண்டியவர்கள். ஆனால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதெல்லாம் எப்படித்தெரியாமல் போய்விட்டது? இவைகளை அவருக்குத் தெரிய வைப்பது நமது கடமையல்லவா? கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், நிலம் உள்ளளவும்இராமச்சந்திரனே ஆளப் போவதாக அந்த அதிகாரி நம்புகிறாரா? இராமச்சந்திரன் ஆட்சிக்காலம் குறிக்கப்பட்டு விட்ட ஒன்று. இதனை அந்த அதிகாரி மறந்திருந்தால் நினைவு படுத்தவேண்டியது நமது கடமை.

எம். ஜி. இராமச்சந்திரன் சட்டத்தின் அரிச்சுவடிகூட அறியாமல் அடிக்கடி சட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். சட்டம் இளஞ்செழியன் காலையில் தன் கடமையைச் செய்யாதிருக்குமானால், ஆளு' கட்சிக்காரர்கள் குற்றம்புரியும்போதெல்லாம்உறங்கப்போவதுபோல இப்போதும் உறங்கப் போகுமானால் விளைவு விபரீதமாகிவிடும்என்று எச்சரிப்பது நமது கடமை. சட்டம் இந்த விஷயத்தில் உறங்குமானால். ஆளும்கட்சிக்காரர்கள் இப்போதும் சட்டத்தைத் தம் கைகளிலேஎடுத்துக் கொள்வார்களானால் அமைதி அழியும்; புயல் எழும்; எரிமலை வெடிக்கும், பூகம்பம் ஏற்படும். இராமச்சந்திரன் ஆட்சி ஆழக்குழிதோண்டி புதைக்கப்படும். இது எச்சரிக்கை. இறுதி எச்சரிக்கை.


தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை. 24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் — பெண் கேன்வாசர்கள் தேவை

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்




மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் செலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும், செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.



தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

# நுனிப்புல் மேயும் கல்வி அமைச்சர்!

கரந்தைப் புலவன்

“ ஜி. ஆர்.— இந்திக்கு மறைமுக ஆதரவு'' என்ற தலைப்பில் 8—10—78 முரசொலியில் வந்த கடிதவடிவக் கட்டுரைக்கு மறுநாளே தமிழக அரசின் கல்வியமைச்சர் அரங்கநாயகம் மறுப்பறிக்கை ஒன்றினை விடுத்திருக்கிறார். அமைச்சர்; அதிலும் கல்வி அமைச்சர் இவ்வளவுசுறுசுறுப்பாக இயங்கியமைக்கு மிகவும் பாராட்டுகிறோம். ஆனால் நடைமுறை உண்மைகளைச் சுட்டிக்காட்டும்போது அதன் மூலம் மக்கள் எங்கே தங்களை அடையாளம் கண்டுவிடுவார்களோ என்று அவசரப்படுகின்ற அவதிநிலையினைக் காண்கின்றோம். எனவே விலா நோகச் சிரிக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்,

தமிழ்ப் புலவர்க்கான புகுமுகத் தேர்வை எடுத்துவிட்டார்கள். அதனால் தமிழுணர்ச்சி உள்ளவர்கள் தனித் தமிழ் பயிலும் வாய்ப்பை இழந்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு விளக்கம்தர முனைந்த அமைச்சர் தமிழ்க் கல்வியின் தரம்உயரவேண்டும் என்பதற்காகப் புகுமுகத் தேர்வின் மூலம் படிக்கும் வாய்ப்பு புதிதாக யாருக்கும் தருவதில்லை' என்கிறார்.

இந்தியப் பெருநாட்டில் இருக்கும் பல்கலைக் கழகங்கள் பல சிறந்த வெளிப் பல்கலைக் கழகங்களை நடத்தி வரும் இந்த நாளில் தரம்பற்றி தரமிக்க அமைச்சர் விளக்கம் தருகிறார். தரம் என்பது நடத்தும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்ததா?படிக்கும் மாணவர்களைப் பொறுத்ததா? என்பதனை அறியாமலே அமைச்சர் பேசுகிறார் என்று தான் எண்ண வேண்டியுள்ளது.

அதிலும் மொழித்துறையைப் பொறுத்தவரை தரம் என்பதே தனித்தன்மைதான். மற்ற மொழிகளைக் கற்காமல் தனி மொழியாக ஒரு மொழியைத் தனித்துக் கற்கும் பொழுதுதான் அதன் தனித்தன்மை காப்பாற்றப்படும் என்பது மொழியறிஞர்கள் கண்ட உண்மை. அந்தஉண்மையின் அடிப்படையில்தான் தனித் தமிழ்க் கல்வியே ஏற்பட்டது. தனித்தமிழ் படித்த மொழியாளர்களால் தமிழ் காப்பாற்றப்படும்; அதன் தூய்மை காப்பாற்றப்படும் இது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல; உலகில் உள்ள அனைத்து மொழிக்கும் உரியதாகும், பொருந்துவதாகும்,

அதனால் தனித் தமிழ்ப் பயிற்சியே கண்டனர். புலவர் என்ற பட்டயப் படிப்பை உண்டாக்கினர் முன்னைய சான்றோர்கள். இம்முறை மொழிகாக்க மிகவும் தேவை. இம்முறையில் தனித் தமிழ் கற்றோர் நாடு முழுமையும் ஆங்காங்கே சில ஆயிரம் பேர்களாவது அவசியம் இருந்தாக வேண்டும்.

இம்முறையில்தான் முன்னோர்கள் புகுமுக வகுப்பை உருவாக்கினர், இப்பொழுது வரும் முறைப்படி ஆங்கிலக் கல்வியுடன் பெற்ற பள்ளியிறுதிவகுப்புபயின்றோர்தான், பி லிட் பட்டம் பெறலாம் என்றால் “தூய தமிழ்'' என்பது போய் “சுத்தத் தமிழ்'' என்பதுதான் நிலைக்கும், “தமிழ் மொழி'' என்பது போய் “ தமிழ் பாஷை'' என்பதுதான்வழக்கில்வந்துவிடும். இந்நிலையை விரும்புவதும் இந்திக்கு மறைமுகமாக ஆதரவு தருவதும் ஒன்று என்பதைத் தவிர வேறுஉண்டா?

அடுத்துப் புலவர்பட்டயம் பட்டமாகவேண்டும் என்பது. பிலிட் என்பதை புலவர்என்ற பெயரிலேயே பட்டமாகக் கொடுங்கள் என்பதுதான் கோரிக்கை.

தமிழாசிரியர் தம் நீண்டகாலக் கோரிக்கை, அதை மறைத்து பி. லிட் என்ற பட்டம். தமிழுக்கு தமிழில் பட்டமில்லை, ஆங்கிலத்தில் பட்டம். இதனைக் கொண்டு வந்தவரே தமிழின் காவலர் எனத் தன்னைக் கூறிக்கொண்ட ஆங்கிலக் காவலரான நாவலர்தான். அதனை நாடு நன்கறியும்! வேண்டுமானால் அமைச்சர் அவர்கட்குப் புரியாமல் இருக்கலாம். இன்று அவர் அருகிலேயே உள்ள நாவலரைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

அது மட்டுமா? தமிழாசிரியர்களின் பதவிப் பெயர் ‘ தமிழ்ப் பண்டிட்'' என்றே இருக்கிறது. இதை மட்டுமாவது மாற்றும் தைரியம் உண்டா இன்றைய அமைச்சர்சர்களுக்கு?

தமிழாசிரியருக்கு வடமொழியிலே பதவிப் பெயர். தமிழ்வளர்ச்சிக்கு கல்வியமைச்சரின் காணிக்கை இதுதானு? வெறும் காசு செலவில்லாத கட்டளைகளைக்கூட இட்டு அதிகார பூர்வமாக மாற்ற முடியாத அமைச்சர்தான் இவ்வாறு அறிக்கை தருகிறார்.

மேலும், ‘ ஒரே ஒருமொழி மட்டும் படித்து ஆங்கிலம் படிக்காமல் பட்டம் பெறும் தகுதி தமிழில் மட்டும்தான் உண்டு.' என்கிறார் அமைச்சர்,

அந்தோ பரிதாபம்! பள்ளி இறுதி வகுப்புவரை ஆங்கிலம் கற்றால்தான் எம். ஏ. வரை போக முடியும் என்பதை அமைச்சர் அறிந்தாரில்லை.

நாம்அமைச்சருக்கு மேலும் சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம் ஒரு மொழிபடித்து மட்டும் பட்டம் பெறும் வாய்ப்பு அதிலும் மேல்நிலைப் பட்டம்பெறும் வாய்ப்பு இந்தி, வடமொழி கன்னடம், மலையாளம் போன்ற பல இந்திய மொழிகளிலும் வந்த பிறகுதான் அவ்வாறெல்லாம் ஆங்கங்கே கொடுக்கப்படுகிறது.

ஆங்கிலம் இல்லாமலே தரப்படுகிறது என்பதனைச் சுட்டிக்காட்டிய பிறகுதான் தமிழுக்கு அந்த வாய்ப்புத் தரப்பட்டதே தவிர ‘தமிழில் மட்டும் தான் உண்டு' என்பது இந்தியப் பல்கலைக்கழகங்களின் நடைமுறை அறியாத காரணமாகிறது. இனியாவது அவைதமை அணுகி அறிந்து உண்மை அறிக்கை தருவார் என எதிர்பார்ப்போமாக. ஏனெனில் எதையும் கேட்டு அறியக் கூடிய இடத்தில் இருந்துகொண்டு இவ்வாறு அறிக்கை தருவது அவரது உயர்ந்த அந்த பீடத்திற்கு அழகல்ல என்பதனைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்று அதுவும் போயிற்று. ஆங்கிலம் பள்ளியிறுதிவரை படியாமல் பி.லிட் இல்லை.

அதுமட்டுமல்ல: நடுவண் அரசு வடமொழியில் சென்னை அண்ணுமலைப் பல்கலைக் கழகங்கள் தரும் ‘சிரோன்மணி முதலிரண்டாண்டு பி. ஏ.க்கு சமமாகவும் கடைசி இரண்டாண்டுப் படிப்பை எம். ஏ. வுக்குச் சமமாகவும் அங்கீகரித்திருக்கிறது.

அதே வாய்ப்பு ‘புலவர்' பட்டத்தினருக்கு இல்லையே? ஏன்? மத்திய அரசுதான் தரவில்லை, தமிழ்நாடு அரசாவது தருமா? அந்தோ இந்தக் கேள்விவையே இன்றைய கல்வியமைச்சரால் செரித்துக் கொள்ள முடியாது என்பதை அறிவோம்.

ஆனால் உண்மை நிலை என்ன? என்ற வினவொன்றினை எழுப்பிஅவசரகாலத்தில் தான் புலவர்தேர்வுக்கு வயது வரம்பு குறைக்கப்பட்டது என்று கூறி, கூறியதோடு நிறுத்தாமல் டாக்டர் கலைஞர் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்த காலத்தில் என, வரலாற்று வல்லுநர் போலத் தன்னை எண்ணிக் கொண்டு எழுதியிருக்கிறார்.

அவசரக் காலத்தில் குறைக்கப்பட்டது உண்மை. ஆனால் அவ்வாறு குறைக்கப்பட்டது யார் காலத்திய முயற்சியின் முடிவு அல்லது பலன்? அதுதான் கலைஞர் காலத்திய முடிவு. அந்த முடிவு செயற்பாட்டுக்கு வந்தது அவசரக் காலத்தில். உற்பத்தியாகும் எந்தப்பொருளுமேஅன்று முளைத்து அன்றே பலன் தருவதில்லை.

பயிர் விளைய உழவனின் முன்னுழைப்புத் தேவை. நிலத்தைப் பண்படுத்தி விதைத்து, நீர்பாய்ச்சி களையெடுத்துக் கண்ணெனக் காத்தால்தான், கடைசியில் தக்க பலன் கிட்டும். அப்படிப்பட்ட பலனை மட்டும் எதனுலோ ஏற்பட்டுவிட்ட பலனைமட்டும் அனுபவிப்பவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம்! ஆனால் உண்மைகளை மறைக்க முடியாது.

மறைத்தாலும் நெடுங்காலத்திற்கு நிலைக்காது,

கலைஞர் ‘செய்வதறியாது இருந்தாரா? அவரை என்ன செய்வதென்று அன்றைய ஆட்சியாளர்கள் திகைத்துத் திணறி இருந்தனரா? என்பதனை வருங்கால வரலாற்று உலகம் சரியாகவே கணிக்கும் அந்தக் காலம் கனியும். அப்பொழுது யாருடைய கணக்கிலே தவறு என்பது புரியும். அதுவரை நாம் அவசரப்படத் தேவையில்லை. அமைச்சருக்கு வேண்டுமானால் அந்த அவசரம் இருக்கலாம். தேவையாகக் கூட இருக்கலாம். நாட்டுக்குத் தேவையில்லை.

மற்றொரு புதுமையான செய்தியைத் தருகிறார், ‘இப்பொழுதும் பி. லிட் படித்தவர்கள் ‘பி. இடி, படிப்பதற்கான சாத்தியக் கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது' என்று.

இனிமேல்தான் பி. ஏ. காரர்களுக்கு பி. இ.டி அனுமதி தரப்போவது போல அக்கூற்று இருக்கிறது. ஆனால் அரசுக் கடிதம் ஒன்று அரசு இணைச் செயலாளருக்காக திரு. பி. எம். பாலகிருஷ்ணனால் எழுதப்பட்டது கூறுகிறது:

பி. லிட் படித்தவர்கள், தமிழ் எம். ஏ. தேர்வும் பி. இ, டி.—யும் எழுதலாம் என்று. அக்கடித எண் 39005— ஜி —3—76—2 தேதி: 9—7—76 ஆகும். இதனை அறியார் போலும் அமைச்சர். அவர் அதனையும் தருவித்துப் பார்ப்பது நலம்.

தமிழாசிரியர்களுடைய கோரிக்கையோ அதுவல்ல. இருக்கிற தமிழாசிரியர் பயிற்சிக்குத் தலைமையாசிரியர் ஆகும் தகுதி உண்டு என்று கட்டளையிடுக என்பதுதான். ஒரு பி.இடி. பட்டதாரி பெறுகிற, தான் பயிற்றும் பாடங்கட்கு ஏற்பப்பெறும் பயிற்சிக்கு எந்த விதத்திலும் குறையாத வகையில்தான்; தான் பயிற்றும் தமிழ்மொழிக்கு ஏற்ற பயிற்சியைப் பெறுகிறான் தமிழாசிரியன். தலைமையாசிரியர் என்ற அந்தப் பதவிக்காக எதையும் தனியாகக் கற்றுவிடவில்லை. பி. டி. ஆசிரியர்கள். மேலும் தமிழாசிரியர்களைவிட அதிகப்படியான வகுப்புகளும், பிரிவு வேலைகளும் எடுத்துவிடவில்லை, எனவேதான் தமிழாசிரியருக்கும் அத்தகுதியைத் தாருங்கள் என்கிறார்கள். இதனை உணர்ந்த டாக்டர் கலைஞர் அன்றே ‘தந்தோம்' என்றார். தமிழாசிரியர்களால் தலைமையேற்கமுடியாதுஎன்றவர்க்கு, “ தமிழ் படித்த நான் முதலமைச்சன் பணியில் நாட்டையே நடத்தும்போது தமிழாசிரியர்களால்ஒருபள்ளியை நடத்த முடியாதா?'' என்று தமிழாசிரியர்களுக்காகத் தக்க பதில் தந்தவர் கலைஞர் ஆவார்கள்.

அந்தநிலை வராமல் தடுத்தவர் யார்?

இவ்வளவு தூரம் வரிந்து கட்டிக்கொண்டு அறிக்கை விடும் அமைச்சரைக் கேட்கிறோம்; மதுரையில் தாங்களே கூறிய “ அண்ணுவின் பழைய ஆணை'' எங்கே? மேடையிலேயே“கட்டளையிட்டேன்'' என்றீர்களே அக்கட்டளை என்னவாயிற்று? “பணிமூப்பாளர்க்கே மேல் நிலைப்பள்ளியில் பணி'' என்ற கோரிக்கை என்ன ஆயிற்ற?

நாட்டின் முதல்வர்; அதே மாநாட்டில் “தமிழாசிரியர்களை மிக உயரத்தில் வைக்கப் போகிறேன்'' என்று உச்சியைக் காட்டினரே சட்டசபையில் வந்தவுடன் “நான் சொல்லவில்லை'' எனச் சொச்சத்தைக் காட்டுகிறரே என்ன மர்மம்? சட்டமன்றத்தில் தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாவதற்கு இருக்கும் தடைகள்களையபட்டு சரிசெய்யப்படும்''என்றூரே அதுதான் தாங்கள் இப்போது கூறும் “பி. லிட் படித்தவர்கள் பி. இ டி. படிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது'' என்பதா? அதிலும் முன்னேஇக்கட்டுரையில் சுட்டிக்காட்டியபடி விருப்பதைத் தாங்கள் செய்தது போலக் காட்ட எண்ணும் அரசியல் ‘ஸ்டண்டின்' வடிவமைப்பா? புலவர் பட்டயம் பெற்று எம் ஏ. பட்டம் பெற்றவன் கூட பயிற்சி பெற்றும் தலைமையாசிரியர் ஆக முடியாது தாய்மொழியைக் கற்ற ஒரே காரணத்தினுல். ஆனுல், இந்தி கற்ற, வடமொழி கற்ற, ஆங்கிலம் கற்றவர்கள் பி. டி. பட்டம் எளிமையாகப் பெறலாம். தலைமையாசிரியர் ஆகலாம். என்ன ஏறுமாறு இழிநிலை பார்த்தீர்களா? அதற்கு அரசின் ஆதரவு உண்டு. இந்த வகையில் ஆராயும் பொழுது இந்திக்கு மறைமுக ஆதரவு என்பதிலே என்ன தவறு? உண்மையேஅதுதானே? அதனை அறிக்கை என்னும் திரையால் மறைத்து விடலாம் என எண்ணுவது மாய்மாலமாகும். அதனைத் தமிழுலகம் நம்பாது.

அது மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணு டாக்டர்கலைஞர் காலத்திலாவது தமிழின் சின்னமான தமிழாசிரியனுக்குப் பள்ளிகளில் நிமிர்ந்துநடக்கும் பெருமையும் பீடும் இருந்தது. இன்றோ அதுவும் போய்பள்ளிகளிலே தமிழாசிரியர்கள்இழிவு படுத்தப்படும் நிலைதான் மிஞ்சிக்கிடக்கிறது. கல்வித்துறையில் மயில்களும், குயில்களும் செல்வாக்குப் பெற்று உலாவும் பொழுது அரங்கங்களிலே நாயகங்கள் நடமாடி என்ன செய்ய முடியும்? தமிழ் எப்படி வாழும்? இந்தி எப்படி நுழையாமல் போகும் ?

★

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவருமல் நாடுவது
தமிழகஎண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு - விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, தேங்காய்மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்பு காரவகைகள்

உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி 12, அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

# ஆட்சியாளர் வன்முறையை எதிர்த்து

# கடை அடைப்பு- வேலை நிறுத்தம்!

அ. தி. மு. க. அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து இம்மாதம் (அக்டோபர்) 23-ஆம் தேதி அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி முழுக்கடை அடைப்பு வேலை நிறுத்தம் நடத்தத் தீர்மானித்துள்ளன.

தொழிலாளர்கள், விவசாயிகள் மாணவர்கள் மீது ஆளுங்கட்சி குண்டர்களும், போலீசாரும் தொடர்ந்து வன்முறைத்தாக்குதல்களை தொடுத்து வருவது தெரிந்ததே

சர்வாதிகாரத் தனமான அ.தி.மு.க.ஆட்சியின் போக்கை எதிர்த்து நடத்தப் போகும் இந்த முழு அடைப்பில் இடம் பெறும் கட்சிகள்:

தி. மு. க.
இ. கம்யூனிஸ்டு
வ. கம்யூனிஸ்டு
ஜனதா
காந்தி-காமராஜ் காங்கிரஸ்
முஸ்லீம் லீக்
பார்வர்டு பிளாக்
குடியரசுக் கட்சி
—ஆகியவையாகும்.

அண்மைக்காலத்தில் தமிழக அரசியல் வரலாற்றிலேயே முதன் முறையாக அனைத்துக் கட்சிகளும் இப்போது ஒரே அணியில் திரள்கின்றன.

## குமுறும் எரிமலைமீது ஒரு...

(10-ப்பக்கத் தொடர்ச்சி)

பவர் நிர்வாகத்தினரும், அரசு தரப்பினருமே!

அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு கூடிய முதலாளித்துவத்தின் இந்தக் கயமைத் தனத்தைக் கண்டித்தும் நியாயம் கேட்டும் பேசிய தொழிலாளர்கள் மீதும், தொழிற்சங்கத் தலைவர்கள் மீதும் வழக்கம்போல மிருகத் தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது அரசாங்கம்

தடியடித் தாக்குதல்களை நடத்தியும். கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் வெறி அடங்காத போலீஸார், துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர், ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல பதினெட்டு முறைகள்!

அத்தோடு ஆத்திரம் அடங்கிட வில்லை—

தொழிற் சங்கத் தலைவர்களான க. சுப்பு எம். எல். ஏ. ஏ. எம். கோபு, குசேலர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொறுப்பில் எடுக்க முடியாதபடி இவர்கள் மீது பயங்கர வழக்குகள் போடப் பட்டுள்ளன;

வேலை நிறுத்தங்களை உடைத்தெறிய ஜார் காலத்து 'பூர்ஷுவா? எவ்வளவு ஈவிரக்கமில்லாமல் நடந்து கொண்டானோ, அதைவிடக் கேவலமான வழிகளைக் கையாளும் இந்த அரசியல் கோமாளி— ஒரு கடைந்தெடுத்த 'பூர்ஷுவா'!

'ஸ்டிரைக்' (வேலைநிறுத்தம்) சட்டவிரோதமானது எனக் கூறிஅதை உடைக்கஅரசுஎந்திரத்தை வேகமாக முடுக்கி விடும் இந்தப் பிறபோக்குவாதி-கதவடைப்பு (லாக்-அவுட்) செய்யும் எந்த முதலாளி மீதாவது கைவைக்கத் துணிந்ததுண்டா?

முதலாளித்துவத்தின் 'ஏஜண்டாக' இருந்து ஆட்சி நடத்தும்' இந்த அரசியல் 'ஞான சூன்யம் தாய்க் குலத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் நீலிக் கண்ணீர் வடிக்கும்!

ஆனால் -

ஈவிரக்கமற்ற, இவர் நிழலில் குளிர்ச்சி காணும் குண்டர்களும், அவர்களுக்குப் பயந்து ஏவல்புரியும் போலீசாரும் போராட்டத்தில் பங்கேற்கும் தாய்க்குலத்தின் மீது மிருகங்கள் போலப் பாய்ந்து தாக்க அஞ்சமாட்டார்கள்!

வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை விடு புகுந்து தாக்குவதையும், அவர்களை இழுத்து வந்து பொய் வழக்குகள் போடுவதையும் பார்க்கும் போது, இது என்ன ஜனநாயகத் தென்றல் வீசும் நாடா? அல்லது சர்வாதிகாரப் புயல் அடிக்கும் காடா? என்று கேட்காமல் இருக்க முடியாது!

விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் மாணவர்கள் தங்கள்கோரிக்கைகளை முன் வைத்து அமைதியான முறையில் ஊர்வலம் நடத்தும்போது—

ஆளுங்கட்சியைச் சார்ந்த குண்டர்கள் திட்டமிட்டு ஊர்வலத்தில் குழப்பம் விளைவிப்பதையும்

அதையே சாக்காக வைத்துப் போலீசார் காட்டுமிராண்டிகளாக மாறிக்கூட்டத்தினர் மீது பாய்வதையும்—மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்;

எரிகின்ற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோன்றஎம்.ஜி.ஆர் பேச்சின் ஒரு பகுதி,இதோ:

"எதற்கெடுத்தாலும் இப்போது போராட்டம் நடத்துகிறார்கள், போராட்டம், போராட்டம் என்று சொல்வதற்கு இன்னும் இரண்டு மாத காலத்தில் ஒரு முடிவு வரும்—"

மாவீரனை ஹிட்லராலேயே செய்ய முடியாததை இந்த 'அட்டைக் கத்தி சாதிக்கப் போகிறதாம்...!

பாவம்—

எரிமலை மீது அமர்ந்து கொண்டு 'பரணி' பாடிக் கொண்டிருக்கிறார். எச்சரிக்கிறோம்.

தூக்கி எறியப்பட்டால் இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து போவீர்கள்!

அரசு—ஆளும் கட்சி குண்டர்கள்—முதலாளிகள் இவர்களின் வன்முறைகளைத் தகர்த்தெறிந்து உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வைப் பாதுகாக்கும் போராட்டத்தில் என்றென்றும் கலைஞரின் தலைமையில் தி.மு.க. முன்னணியில் நிற்கும் என்பதை மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறோம்.

★★★★★★★★★★

## இலவச புத்தகம் வழங்கும் விழா

முப்பெரும் விழாவையொட்டி ஏழை மாணவ மாணவியர்கள் 250 பேர்களுக்கு இலவச வைத்திய நிலையம் நடத்தி வரும் சூலூர் ஒன்றிய தி. மு. க. மாவட்ட பிரதிநிதி சு ரா. சுப்ரமணியம் புத்தகம் வழங்கினார்.

நோட்டுகள் ராமா பல்பொடி கம்பெனியார் அன்பளிப்பாக அளித்துள்ளார்கள்,

★★★★★★★★★★

## புனித ராஜ்யம்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

நமக்கு ரொம்ப வேண்டியவரு! அத்தே! உங்களால உடனடியா ஒரு உதவி ஆகணும்—

பாலம்மாள்; என்னடிஉதவி! என் கண்ணு! எதுவானலும் செய்றேன்

சுந்தரி; எனக்குப் பாதுகாப்பா வந்த ஒருத்தரை ரயிலடியிலே போலீஸ் மடக்கி மதுபாட்டில் வச்சிருந்ததா அரஸ்ட் பண்ணிட்டுப் போய்ட்டாங்க! அவரை ஜாமீன்லஎடுக்க ஒரு நல்ல வக்கீல் தேவை!

பாலம்மாள்: இதானு பெரிய காரியம்— நான் ஏற்பாடு பண்றேன். நாலஞ்சு வக்கீல் இருக்காங்க. நான் போன் பண்ணிப் பேசி ஆகவேண்டியதைப் பார்க்கிறேன் முதல்ல நீ குளிச்சி முழுகி டிபன்சாப்பிடு. நீயுந்தான் தம்பீ சாப்பீடு!...


சுந்தரி: சாப்பாடெல்லாம் அப்புறம் அத்தே! முதல்ல அவரை ஜாமீன்ல விடுதலை பண்ணியாகணும்—

பாலம்மாள்: சொக்கி!... இல்லை இல்லை..., சுந்தரி குட்டி! அது அதுக்கும் சடங்கு சம்பிரதாயம் இல்லியோ? நீ போயி காரியங்களைப் பாரு — நான் அந்த வழக்கு விஷயத்தை கவனிக்கிறேன்...

(பாலம்மாள் டெலிபோனை எடுத்து எண்களைச் சுற்றுகிருள்)

**(காட்சி முடிகிறது)**

(தொடரும்)




திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயணசெட்டிதெரு, ராயபுரம், -600013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்' 508 அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை -600018 தொலைபேசி 441009